பக்கங்கள்: 12

விலை: 20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 18 சனிக்கிழமை 01.06.2019 கதிர் 208

**இனிது ரகசியம் அல்ல!**

வடக்கில் தமிழர்களின் அறிவுக் கருவூலமாக இருந்த யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்ட நினைவு தினம் இன்று.

மீளக் கிடைப்பதற்கரிய 97 ஆயிரம் புத்தகங்கள், பழை நாளிதழ்கள், அச்சுவாகனம் யாழ்ப்பாணம் வந்த காலத்தில்

பக்கம் 02



### தலதா மாளிகைக்கு முன்னால்

# நேற்று உண்ணாவிரதத்தில் குதித்தார் அத்துரலிய தேரர்

### ரிஷாத், அஸாத் ஸாலி, ஹிஸ்புல்லாவை பதவி நீக்கக் கோரி

கொழும்பு, ஜூன் 01

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு முன்னால் நேற்றுக் காலை தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன், மேல் மாகாண ஆளுநர் அஸாத் ஸாலி மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்

பக்கம் 11

# அதிரடி முடிவுகளுக்கு மைத்திரிபால தயார்!



### அமைச்சர் ரிஷாத்தை பதவி விலகக் கோருவார்


கொழும்பு, ஜூன் 01

அமைச்சர் ரிஷாத், ஆளுநர்கள் அசாத் சாலி, ஹிஸ்புல்லாஹ் ஆகியோரைப் பதவி விலக வலியுறுத்திக் கண்டியில் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தை அத்துரலிய ரத்னதேரர் ஆரம்பித்துள்ளமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக நம்பகரமாக அறியமுடிந்தது. இதனால் அவர் அதிரடியான சில முடிவுகளை எடுக்கத் துணிந்திருப்பார் எனக் கூறப்படுகின்றது.

பக்கம் 11

## ஜனாதிபதியின் அதிகாரங்களை பயன்படுத்துகிறார் ஹிஸ்புல்லா

### அத்துரலிய ரத்ன தேரர் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 01

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் தற்போது கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவினால் பயன்படுத்தப்படுகின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் குற்றம்சாட்டியுள்ளார்.

பயங்கரவாதத் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள்

பக்கம் 11

## ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக யாழ்.முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டம்!



யாழ்ப்பாணம், ஜூன் 01

யாழ். முஸ்லிம் சமூகத்தினால் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

பக்கம் 11

## மோடி இந்த மாதம் கொழும்பு வருவார்

### உறுதிப்படுத்தினார் மைத்திரி

புதுடில்லி, ஜூன் 01

மாலைதீவுக்குச் செல்லும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அந்த விஜயத்தை முடித்து ஜூன் 9 ஆம்

பக்கம் 11

## இலங்கைக்கு சகல உதவிகளையும் வழங்குவதற்கு இந்திய அரசு தயார்!

### மைத்திரியிடம் நேற்று கூறினார் மோடி



புதுடில்லி, ஜூன் 01

எதிர்காலத்தில் இலங்கைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க தயாராக உள்ளதாக இரண்டாவது தடவையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இந்தியப் பொதுத்தேர்தலில் மகத்தான வெற்றியை பெற்றுக் கொண்ட நரேந்திர மோடி இரண்டாவது தடவையாகவும் நேற்று முன் தினம் பிற்பகல் இந்தியப் பிரதமராக பதவிப்பிரமாணம் செய்தார். மோடியின்

பக்கம் 11

## டிசெ. 7ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல்

கொழும்பு, ஜூன் 01

ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடத்தப்படும் என்ற திகதி விவரத்தை தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய நேற்று அறிவித்தார்.

பக்கம் 11

## சஹ்ரான் ஹாசிமின் லப்ரொப் பாலமுனைக் களப்பில் மீட்பு!






மட்டக்களப்பு, ஜூன் 01

நாட்டில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களின் முக்கிய சூத்திர

பக்கம் 11

## புலனாய்வுப் பிரிவை அரசியலுக்காக பயன்படுத்துவதை ஏற்கவேமுடியாது

### தேசிய பாதுகாப்புக்கு அது அச்சுறுத்தல் என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த



கொழும்பு, ஜூன் 01

தனிப்பட்ட அரசியல் ஆதாயங்களுக்காகப் புலனாய்வுப் பிரிவினரின் தகவல்களைக் கோருவது நாட்டின் தேசிய பாதுகாப்பைப் பாதிக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பக்கம் 11

## இந்திய வெளியுறவு அமைச்சராக தமிழரான ஜெய்சங்கர் நியமனம்!

### பிரதமர் மோடியின் அதிரடி நடவடிக்கை



புதுடில்லி, ஜூன் 01

இந்திய வெளிவிவகார அமைச்சராக, முன்னாள் வெளிவிவகாரச் செயலர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிதலைமையிலான

பக்கம் 11

## பந்துவீச்சாளர்கள் மிரட்டல்

# பாகிஸ்தானைத் துவம்சம் செய்தது மேற்கிந்தியத் தீவு





உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில் இதன் இரண்டாவது போட்டி மேற்கிந்திய தீவுகள் மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் பந்துவீச்சாளர்களின் மிரட்டல் பந்துவீச்சால் பாகிஸ்தானை துவம்சம் செய்து வெற்றிவாகை சூடியது மேற்கிந்திய தீவுகள் அணி. இப்போட்டியில் இவ்வணி 7 விக்கெட்டுகளால் வெற்றியை சுவீகரித்தது.

நொட்டிங்டம் இல் உள்ள ரெண்ட் பிரிஜ் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, மேற்கிந்திய தீவு பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. இந்நிலையில், பாகிஸ்தான் அணி 21.4 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 105 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

அந்த அணி சார்பாக பாஹர் மன் மற்றும் பாபர் அாம் ஆகியோர் தலா 22 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர். ஏனைய வீரர்கள் சோபிக்காத நிலை




யில் ஒற்றையிலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் மேற்கிந்திய தீவுகள் அணி சார்பாக, ஒஷென் தோமஸ் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். அத்துடன் ஜெஸன் கோல்டர் 3 விக்கெட்டுகளையும், அன்ரூ ருஸ்ஸெல் 2 விக்கெட்டுகளையும் மற்றும் ஹொட்ரெல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்நிலையில், பதிலுக்கு 106 என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, 13.4 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. அந்தவகையில் மேற்கிந்திய தீவுகள் அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றியை சுவீகரித்தது.

அணி சார்பாக, அதிரடியாக ஆடிய கிரிஸ் கெயில் 50 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்ததோடு நிக்கோலஸ் பூரன் 34 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக பந்துவீச்சில் மிரட்டி 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய ஒஷென் தோமஸ் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் மேற்கிந்திய தீவுகள் அணி உலகக் கிண்ணத் தொடரில் முதல் வெற்றியைப் பதிவு செய்தது. (ஐ)

## சிவாஜிக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரான எம்.கே. சிவாஜிலிங்கம் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரது பிறந்தநாளைக் கொண்டாடினார் என்றும் விடுதலைப் புலிகள் தொடர்பான பதாகை ஒன்றும் வைத்திருந்தார் என்றும் குற்றஞ்சாட்டி எம். கே. சிவாஜிலிங்கம் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வல்வெட்டித்துறைப் பொலிஸார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர். கல்

இந்த வழக்கில் நேற்று முன்னிலையாகுமாறு எம். கே. சிவாஜிலிங்கத்துக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்திருந்தது.

இதனால் நேற்று மன்றில் முன்னிலையாகிய எம். கே. சிவாஜிலிங்கத்தை மன்று வளாகத்தில் வைத்து இந்த விடயம் தொடர்பாக வாக்குமூலம் வழங்குமாறு நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது. இதனடிப்படையில் எம். கே. சிவாஜிலிங்கம் மன்று வளாகத்தில் வாக்குமூலம் வழங்கினார். வழக்கில் மூத்த சட்டத்தரணி சிறிகாந்தா ஆஜராகியிருந்தார்.

இந்நிலையில் வழக்கு மேலதிக விசாரணைகளுக்காக எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கைது செய்யப்படாமலிருக்க முன் பிணை கோரிய மனுவை சட்டத்தரணி நடராசா சுஜீவன் தாக்கல் செய்திருந்தார். அந்த மனு மீதான விசாரணை ஜூன் மாதம் 7 ஆம் திகதி எடுத்துக் கொள்ளப் படவுள்ளதாக எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

## யாழில் இன்று கருத்துப் பகிர்வு

யாழ்ப்பாணம், 2ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள சிந்தனைக்கூடத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும் கருத்துப் பகிர்வு நிகழ்வில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, வடமாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராஜா ஆகியோர் கருத்துரையாற்றுவர்கள். 'எதிர்கால சந்ததிக்கு நல்லதோர் தேசத்தை உருவாக்குவோம்' என்ற தலைப்பில் இந்த கருத்துப் பகிர்வு நிகழ்வு இடம்பெறுகிறது.

## அம்பாந்தோட்டையில் புத்தர் சிலை உடைப்பு!



அம்பாந்தோட்டை, ஜூன் 01

அம்பாந்தோட்டை ரூவன்புர உபரத்ன பௌத்த மத்திய நிலையத்துக்கு முன்பாவிருந்த மூன்று அடி உயர புத்தர் சிலை நேற்று முன் தினம் இரவு உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளதாக மத்திய நிலையத்தின் அதிகாரி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

புத்தர் சிலை இரண்டாக உடைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்றும் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## வவுனியா வளைவு விவகாரத்தில் திங்களன்று உரிய நடவடிக்கை!

### ரெலோ சிறீகாந்தா உறுதியளிப்பு



வவுனியா, மூன்று முறிப்பு, கண்டி வீதிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 'வவுனியா வரவேற்கின்றது' என்று எழுதப்பட்டுள்ள வளைவு கடந்த சில தினங்களாக படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு படையினரைச் சித்தரித்துத் தனிச் சிங்கள மொழியில் எழுதப்பட்டு வளைவு ஒன்று நிரந்தரமாக சீமெந்து போட்டு அமைக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து ரெலோவின் தலைவரும், வன்னி மாவட்டத்துக்கான கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் நாளை நாடு திரும்பியதும் நாளை மறுதினம் (திங்கட்கிழமை) பாதுகாப்பு அமைச்சின் செயலாளை சாந்த கோட்டேகொடவின் கவனத்துக்குக் கொண்டு வந்து உரிய நடவடிக்கை எடுப்பார்.

ரெலோவின் செயலாளர் நாயகம் என். சிறிகாந்தா இத்தகவலைத் தெரிவித்தார் .

தென்பகுதியிலிருந்து கண்டி வீதிவழியாக வவுனியாவிற்கு வருபவர்களை வரவேற்கும் பிரதான வளைவு வவுனியா நகருக்குட்பட்ட மூன்றுமுறிப்பு பகுதியில் நிரந்தரமாக நீண்டகாலமாக அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது அண்மைக்காலமாக அதற்கு முன்பாக சில அடி தள்ளி நிரந்தரமாக கம்பியினால் வளைவு ஒன்று அமைக்கப்பட்டு படையினரைச்சித்தரிக்கும் படங்களுடன் 'ஊருக்குள் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவோம் 'என்று தனிச்சிங்கள மொழியில் மட்டும் எழுதப்பட்ட வாசகத்துடன் நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ளது.

இச் செயற்பாடு தமிழ் இனத்தின் மீதான ஆக்கிரமிப்புத் தன்மையை வெளிக்காட்டி நிற்கிறது. தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வவுனியாவில் இத்தகைய நடவடிக்கையை இராணுவம் முன்னெடுப்பது தமிழர்களைச் சீண்டிப்பார்க்கும் நடவடிக்கை. அவசர காலச் சட்டத்தின் கீழ் படையினர் செய்ய வேண்டிய வேறு வேலைகள் பல இருக்கின்றன. அவற்றை விட்டுவிட்டு இத்தகைய பொறுப்பற்ற வேலைகளை இராணுவம் செய்கின்றமையை அனுமதிக்க முடியாது – என்றார் சட்டத்தரணி சிறிகாந்தா.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆறுமுகநாவலராலும் ஏனையோராலும், அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள், எழுத்தாணிகள் மூலம் எழுதப்பட்ட ஏடுகள் என இன்ன பிற தொல்பொருள் சான்றாதாரங்களும் பேரினவாதச் சிங்களத்தினால் எரித்துச் சாம்பலாக்கப்பட்ட பெரும் கொடூரம் நிகழ்ந்த தினம்.

உயிர்ப் படுகொலைகள், உடைமைகள் அழிப்பு, சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழர் தாயகத்தைக் கபளீகரம் செய்தல் என்று கொடுங்கோன்மையாகக் கட்டவிழ்ந்த பேரினவாதக் குரூரச் செயல்களின் வடிவத்தில் ஒன்றுதான் இந்த நூலக எரிப்பு அராஜகமும்.

தமிழர்களின் வாழ்வியல் கோலங்களின் உயிர்ப்பாக இருந்த யாழ். பொது நூலகத்தை எரித்து, சிதைத்தழித்த இந்த பேரராஜகத்தை பண்பாட்டுப் படுகொலை' என்று பெரும் மன வேதனையுடன் குறிப்பிடுவார் தமிழ் ஆர்வலரான இன்பரசு.

இந்தப் பண்பாட்டுப் படுகொலை குறித்து அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தமிழர் விடுலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் நாடாளுமன்றத்தில் கூறிய கருத்தை மட்டும் இன்று இங்கு பதிவிட விரும்புகிறேன். இவ் விடயத்தில் பௌத்த, சிங்களப் பேரினவாதப் பண்பியல்பு எத்தகையது என்பதைக் காட்ட அந்த உரையின் சில வாசகங்கள் போதுமானவை என நினைக்கிறேன்.

*“பொலிஸ்மா அதிபரும் பிரிகேடியர் வீரதுங்கவும் யாழ்ப்பாணத்தில் இருக்கத்தக்கதாக ஜூன் முதலாம் திகதி இரவு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் கொடூரமானவையும் வியப்பானவையுமாகும். அதே பொலீஸார் அன்றிரவு யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திற்குத் தீயிட்டனர். ஏறத்தாழ 97 ஆயிரம் பெறுமதிமிக்க நூல்கள் எரிந்து போயின. அந்த நூலகம் நீண்ட காலமாகக் கட்டி எழுப்பப்பட்டது. அதனை எரித்து முடித்தனர். உலகில் எங்கிருந்தும் இனிப் பெறுதற்கு அரிய நூல்கள் பல எரிந்து போயின.*

*இந்த நாட்டில் வசிக்கின்ற ஒரு பகுதி மக்களின் மன நிலையைப் புரிவதற்கு இந்தச் சம்பவம் தக்க குறிகாட்டி ஆகும்.*

*“இரண்டாம் உலகமகா யுத்தத்தின் போது பிரித்தானியாவின் மீது குண்டுவீசச் சென்ற விமானப் படை விமானிகளுக்கு ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திற்குக் குண்டுகளை வீசி அழித்து விடக் கூடாது என ஹிட்லர் உத்தரவிட்டிருந்தான்.*

*“அதேபோல ஜேர்மனியின் ஹைடில்பேர்க் பல்கலைக்கழகத்தைத் தவிர்க்கும்படி பிரித்தானியா தனது விமானப்படைக்குப் பணிப்புரை வழங்கியது.*

*“அறிவுக் களஞ்சியங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் மோசமான பகைவர்களுக்குக் கூட இருந்தது.*

*“ஆனால் யாழ்ப்பாணத்தில் கண்மூடித்தனமாக நடந்து கொண்ட பொலிஸார் அங்கிருந்த நூல் நிலையத்தைக் கூட விட்டு வைக்கவில்லை.”* – என்று நாடாளுமன்றத்தில் உண்மையைப் புட்டு வைத்தார் அமிர்தலிங்கம்.

அறிவுக் கருவூலங்களை ஹிட்லர் கூட மதித்தான். ஆனால், அதற்கு மாறாக, சாந்தமே உருவான கௌதம புத்தரின் பஞ்சசீலத்தை வரித்துக் கொண்டதாகக் கூறப்படும் தென்னிலங்கை பௌத்த சிங்களத்தின் பண்பாட்டு மனவியல்பு எவ்வாறு இருந்தது என்பதை சிங்கள நாடாளுமன்றத்திலேயே துலாம்பரமாக எடுத்துக் காட்டியிருக்கின்றார் அமிர்தலிங்கம்.

தென்னிலங்கையின் மன நிலை இன்னும் கூட மாறவில்லை என்பதுதான் எனது கணிப்பீடு. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

**- மின்னல் -**

# கறுப்பு ஜூலை தவறுக்கு நாம் மீண்டும் இடமளிக்கக்கூடாது!



## பிரதமர் ரணில் கோரிக்கை

கொழும்பு, ஜுன் 01

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற தவறை மீண்டும் செய்யவேண்டாமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

83 இல் செய்த தவறை நாம் திரும் பவும் செய்யக்கூடாது. நாம் எந்தவொரு இனக்குழுவையும் ஒதுக்கக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆறு இலட்சம் குடும்பங்களுக்குச் சமுர்த்தி உதவி வழங்கும் வேலைத் திட்டத்தின் தேசிய வைபவம் நேற்று முன்தினம் அம்பாறையில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

பயங்கரவாதத்தை மிகக் குறுகிய காலத்திற்குள் ஒழித்து நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், சில தரப்புக்கள் கட்டுக்கதைகளைப் பரப்பி மக்கள் மத்தியில் தேவையற்ற பீதியை ஏற்படுத்த முயற்சிகள் நடக்கின்றன.

தற்போது இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பும், சஹ்ரானின் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பும் முழுமையாக ஒழிக்கப்பட்டுள்ளன. இந்தப் பயங்கரவாதச் செயற்பாடுகள் மீண்டும் நாட்டில் ஏற்படாத வண்ணம் செயற்படுவதற்கு தற்போதுள்ள முறைகளை மீள்கட்டமைப்புக்கு உட்படுத்தி மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

சஹ்ரானின் குழுவினர் இன்று உயிருடன் இல்லை. அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். தேசிய தௌஹீத் ஜமாத்திற்கு இன்று எதுவித அதிகாரமும் கிடையாது. இனிமேல் அஞ்சத் தேவையில்லை.

இன்று சஹ்ரானோ, தௌஹீக் ஜமாத்தோ இல்லையென்று சந்தோ–ஷப்பட முடியாது. இது புலிகள் போன்று பாரிய அளவில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை அல்ல. நாளை இன்னொரு குழு உருவாகலாம். இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு புதிய சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்.

ஆனால், சட்டங்கள் மாத்திரம் போதாது. மீளமைப்பு முயற்சிகள் உருவாக்கப்படவேண்டும். புலிப் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு பயன்படுத்திய வியூகத்தைப் போன்று ஐ.எஸ். ஐ.எஸ். இயக்கத்தை தடுத்து நிறுத்துவதற்கு வியூகமொன்று அவசியம் – என்றார். (ஐ)

# தேசிய அடையாள அட்டையில் வரவிருக்கின்றது திடீர் மாற்றம்

கொழும்பு, ஜுன் 01

நாட்டு மக்கள் அனைவரினதும் தேசிய அடையாள அட்டையில் அவரவர் கைவிரல் அடையாளத்தை உள்ளடக்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பை மேலும் உறுதி செய்யும் நோக்கில் இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருப்பதாக ஆட்பதிவுத் திணைக்களம் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்தார்.

பழைய தேசிய அடையாள அட்டையில் நிலவிய பல குறைப்பாடுகள் புதிய தேசிய அடையாள அட்டையின் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டிருப்பதாக அவர் மேலும் கூறினார்.

புகைப்படத்தை மாற்றுதல் அல்லது முத்திரையை நீக்கி தகவல்களை மாற்றுதல் போன்றவற்றைப் புதிய அடையாள அட்டையில் செய்ய முடியாது என்றும் ஆணையாளர் நாயகம் உறுதியாக குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் டீ.என்.ஏ. தரவு அல்லது கைவிரல் அடையாளம் போன்ற தரவுகள் பயன்படுத்தப்படவுள்ளன.

இவற்றில் கை விரல் மாத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தற்பொழுது சட்டரீதியில் அனுமதி கிடைத்திருப்பதாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார். (ஐ)

# அப்பாவி முஸ்லிம் மக்களை இம்சைப்படுத்த வேண்டாம்

## அமைச்சர் மங்கள கோரிக்கை



கொழும்பு, ஜுன் 01

அப்பாவி முஸ்லிம் மக்களைச் சிறைப்படுத்துவதன் ஊடாக, சிறைச்சாலைகள் அடிப்படைவாதிகளை உருவாக்கும் மத்திய நிலையமாக மாறிவிடும் என நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நிதி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

முஸ்லிம்கள் பல்வேறு வகையான துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்படுவதாகத் தகவல்கள் கிடைக்கப் பெறுகின்றனர் எனத் . முஸ்லிம் பெண்கள் தலைமுடியை மறைத்துக் கொண்டு சென்றாலும், பொதுச் சேவையிலுள்ள பஸ்களில் இம்சைப்படுத்தப்படுகின்றனர் எனவும் தகவல்கள் கிடைத்துள்ளன. பாட சாலைகளிலும் இவ்வாறு இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.

அப்பாவி முஸ்லிம்களைச் சிறைச்சாலைகளில் நிரப்பி வைத்துக் கொண்டிருக்கவேண்டாம். இது போன்ற நடவடிக்கையினால், எதிர்காலத்தில் பயங்கரவாதிகள் உருவாக வழிவகுக்கவேண்டாம் – என்றார். (ஐ)

# அதிகாரத்தை தக்க வைப்பதற்கு மஹிந்தவிடம் ரணில் சரணாகதி!

## பேராசிரியர் சரத் விஜேசூரிய குற்றச்சாட்டு



கொழும்பு, ஜுன் 01

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பல சந்தர்ப்பங்களில் அரசியல் அநாதையாக்கிய எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவிடம் சரணாகதி அடைந்து, அரசியல் அதிகாரங்களை தக்கவைத்துக் கொள்வதற்கு ரணில் முயற்சிக்கிறார் எனப் பேராசிரியர் சரத் விஜேசூரிய விசனம் தெரிவித்தார்.

கோட்டை ஸ்ரீ நாக விகாரையின் விகாராதிபதி மாதுலுவாவே சோபித தேரரின் 77 ஆவது ஜனன தினம் கடந்த புதன்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நினைவு கூரப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனவரி 8 ஆம் திகதி பிரார்த்தனை நிறைவேறாமல் அரச நிர்வாகம் சிதைவடைவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. புத்திசாதுரியமற்ற தற்பெருமையால் தலைக்கனம் கொண்ட அதேவேளை, மக்கள் மீது சிறிதளவும் அக்கறையற்ற, மக்களுக்குப் பொறுப்பு கூறாத பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிற்போக்கு அரசியலே முதலாவது காரணமாகும். அடிவருடி ஒருவரிடம் நெல்சன் மண்டேலாவைப் போன்ற தலைமைத்துவத்தை எதிர்பார்க்கும் முட்டாள் தனம் இரண்டாவது காரணமாகும்.

ஜனநாயகத்தை மதிப்பவராக தன்னை வெளிப்படுத்திக் கொண்டு , அதற்கு எதிராகச் செயற்படும் ஒருவரிடத்தில் ஜனநாயக ரீதியிலான நிர்வாகத்தை எதிர்பார்த்தமையே இன்று ஐக்கிய தேசியக் கட்சி தவறான வழியில் செல்வதற்கான காரணமாகும். தற்போதைய பிரதமரே இதன் பின்புலத்தில் உள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் தொடர்ச்சியாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்துக்கு உரிமை கோரி வருகின்றார். ஏகாதிபத்தியவாதியாகவே அவர் கட்சித் தலைமைத்துவத்தை வகிக்கின்றார். ஐக்கிய தேசியக் கட்சியைத் தனக்கு தேவையானவர்களுக்கு மாத்திரம் உகந்த வகையில் வைத்திருப்பதாக வேறு எவருக்கும் வாய்ப்புக்களை வழங்காது இருப்பதே அவரது அரசியல் நோக்கமாகும்.

தொடர்ச்சியாக பாரிய தோல்விகளுக்கு முகங்கொடுத்து எதிர்க்கட்சித் தலைவர் பதவி மீது மோகம் கொண்ட ஒருவரை கட்சித் தலைவராக ஏற்றுக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மைகளாவர். இவர்களே இதற்கு பொறுப்பு கூறவேண்டும். நாட்டில் பிரதான கட்சியொன்றின் தலைவராக இருந்து கொண்டு, இரு தடவைகளில் ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிட்டு, கடந்த 2015 ஆம் ஆண்டு தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளரைக் கடன் வாங்கிய இவர் தலைமைத்துவம் வகிக்கத் தகுதியற்றவர் என்பதை வெளிப்படுத்துகின்றது.

அவரைப் பல தடவைகள் அரசியல் அநாதையாக்கி அரசியலிலிருந்து ஓரங்கட்டுவதற்கு முயற்சித்த தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்தவை தஞ்சமடைய தற்போது ரணில் முயற்சிக்கின்றார். அவரது பாதங்களைப் பற்றி அரசியல் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் முயற்சிக்கின்றார்.

மெதமுலனவுக்குச் செல்வதற்கு மஹிந்தவுக்கு இரண்டு ஹெலிகொப்டர்களை வழங்கியதோடு, 2015 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி காலை மஹிந்தவையும் அவரது குடும்பத்தினரையும் பாதுகாப்பதாக வழங்கிய வாக்குறுதிகளை இன்றும் நிறைவேற்றி வருகின்றார்.

பிரதமராக பதவியேற்றதன் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஓரங்கட்டியது மாத்திரமின்றி தனது தேவைக் கேற்ப நாட்டை நிர்வகிப்பதே அவரது தேவையாகும். இவ்வாறு சிந்திப்பது துரதிஷ்டமானது. இந்த சூழ்நிலையைச் சரியாகப் புரிந்து கொண்ட சோபித தேரர் இரண்டு தடவைகள் பிரதமரைச் சந்தித்து ஜனாதிபதியுடன் முரண்படாமல் இருவரும் இணங்கிச் செயற்படுவதே முறையானது என்பதை வலியுறுத்தி வந்தார். அதனைக் கேட்டுக்கொண்டபோதும் அவர் அதனைப் பின்பற்றவில்லை.

ரணில் விக்கிரமசிங்க அனுபவம் மிக்க அரசியல்வாதியாக இருந்தபோதும் கண்ணாடிக் கூண்டுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். எமது நாட்டின் அரசியல் அவருக்குப் பொருந்தாது. அரசியல் அரங்கில் திறமைகளை வெளிப்படுத்துகின்ற போதிலும், அதில் வெற்றி பெற முடியாதவர்.

ரணிலுடன் ஒப்பிடுகையில் மஹிந்த கற்தரையிலும், கரடு முரடான தரையிலும் நீந்தக் கூடியவர். ரணில் எந்த விதத்திலும் அரச நிர்வாகத்துக்கு பொறுத்தமற்றவர். அது பொன் எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது. அவர் கட்சியிலிருந்து நீங்க வேண்டும். இல்லையென்றால் நாட்டை நேசிப்பவர்கள் அவரை நீக்கவேண்டும்.

அவரிடம் குழுவொன்றும், கூட்டமொன்றும், கட்சியொன்றும் உள்ளது. இந்நிலையில் தான் தனித்து விடப்பட்டுள்ளமையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிந்துள்ளார். எனினும் அதன் அபாய நிலையை ரணில் விக்கிரமசிங்க புரிந்து கொள்ளாமல் அதே மமதையுடனேயே உள்ளார். இந்த நிலைமையைப் பயன்படுத்தி மஹிந்த அமரவீர ஜனாதிபதியை தன்பக்கம் இழுக்க முயற்சிக்கின்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரபல உறுப்பினர்கள் பலரும் நீதியின் பிடியில் சிக்கவிருந்தனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனான தொடர்புகளை அவர்கள் வலுப்படுத்திக் கொள்கின்றனர். உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரங்களின்போது மத்திய வங்கி ஊழல் தொடர்பிலும், அர்ஜுன மகேந்திரனின் செயற்பாடு தொடர்பிலும் கடும் ஊழல்வாதிகளான எதிரணியினர் விமர்சிக்கத் தொடங்கினர்.

இதனால் ஐ.தே.க மற்றும் சு.க என்பன சீரழிகின்றன. பிணைமுறி தொடர்பாக விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு நியமித்தார். இதன்போதுகூட மஹிந்த காலத்தில் இடம்பெற்ற ஊழல்களை விசாரிக்குமாறு ரணில் கோரவில்லை.

இதனால் தான் ஜனாதிபதி மஹிந்தவுக்கு அதிகாரங்களை வழங்கினார். அதிலிருந்தும் பிரதமர் பாடம் கற்றுக் கொள்ளவில்லை. அவர் ஒரு புதுமையான மனிதர். விமல் வீரவன்ஸ, தினேஷ் குணவர்தன உள்ளிட்டோரைப் பாதுகாத்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தக்கவைத்துக் கொள்ள அவர் முயற்சிக்கின்றார்.

எவ்வாறிருப்பினும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கி வெற்றி பெறச் செய்து தற்போதைய நிலையிலிருந்து விடுபட வேண்டும். எனவே நியமிக்கப்படும் பொது வேட்பாளர் வேட்புமனு தாக்குதல் செய்வதற்கு முன்னரே தனது கட்சி உறுப்புரிமையை இரத்துச் செய்யவேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பொது வேட்பாளராக களமிறக்கிய போது அதற்கு ஒத்துழைப்பு நல்கியமை நாம் செய்த தவறாகும். எனவே மக்களுக்கு சேவையாற்றக் கூடிய ஒரு தலைவரை தெரிவு செய்வதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் – என்றார். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## தொடரும் நிழல் யுத்தம்

நாட்டின் தேசிய பிரச்சினைகளை அதற்குரிய முறையில் அணுகாமல் அவற்றை தங்களுடைய குறுகிய அரசியல் நோங்களுக்காகப் பயன்படுத்துவதில் இலங்கையின் அரசியல் தலைவர்கள் கொஞ்சமும் சளைத்தவர்கள் அல்லர்.

நாட்டின் ஜனாதிபதி , பிரதமரிலிருந்து கடை நிலை அரசியல்வாதி வரை இதுதான் பண்பியல்பாக இருக்கின்றது.

இதுதான் இலங்கையின் பெரும் சாபக்கேடு.

இப்போதும் கூட சர்வதேச இஸ்லாமியப் பயங்கரவாதம் தனது கொடூரக் கரங்களைத் திடீரெனக் காட்டி முழு இலங்கையையும் ஓர் உலுப்பு உலுப்பும் விதத்தில் அதிரடித் தாக்குதல்களைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் இந்தச் சமயத்தில் கூட ஒன்றுபட்டு நின்று அதனை எவ்வாறு வெற்றி கொள்ளலாம் என்பதை பற்றிச் சிந்திப்பதை விடுத்து, அரசியல் ரீதியாக கன்னை பிரிந்து கொண்டு நின்று, இந்தச் சந்தர்ப்பத்தை வசமாகப் பயன்படுத்தி, மாற்றுத் தரப்புகளில் இருக்கும் அரசியல்வாதிகளையும், அரசியல் தரப்புகளையும் எப்படிக் காலை வாரி விழுத்தலாம் என்பது குறித்து மட்டுமே நமது அரசியல் தலைவர்கள் சிந்திக்கின்றார்கள்.

'அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது போல' முஸ்லிம் தீவிரவாதத் தரப்புகளை வீழ்த்துவதாக நினைத்துக் கொண்டு அமைச்சர்கள் ரிஷாத் பதியுதீன், ஆளுநர்கள் ஹிஸ்புல்லா, அஸாத் சாலி ஆகியோரைப் போட்டுத் தாக்குகின்ற எதிரணியின் போக்கும் இத்தகையதுதான்.

அது போன்றவைதான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடும், அவருக்கு எதிராக ஆளும் ஐக்கிய தேசியக் முன்னணித் தரப்பு முன்னெடுக்கும் காய் நகர்த்தலும் கூட.

ஈஸ்டர் ஞாயிறன்று இடம்பெற்ற மோசமான தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் உரிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கத் தவறியமைக்கான பழி தம் மீது விழுவதைத் தவிர்ப்பதற்காக பாதுகாப்பு செயலாளரையும் பொலிஸ்மா அதிபரையும் பலியாடாக்கினார் ஜனாதிபதி. அந்த நடவடிக்கையை கனகச்சிதமாக நிறைவேற்றுவதற்காக தமக்குப் பொருத்தமான விசாரணைக் குழு ஒன்றையும் அவர் நியமித்துக் கொண்டார். 'வேலிக்கு ஓணான் சாட்சி' என்ற மாதிரி இவ்விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்பார்க்கும் பரிந்துரையை ஆணைக்குழு சிபாரிசாக முன்வைக்கும் என்று பல தரப்பிலும் பேசப்பட்டது.

ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல் விடயத்தை இவ்வாறு தமக்குச் சாதகமான அரசியலாகக் கொண்டு நகர்த்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால முயல்கின்றார் என்று கருதிய ஆளும் ஐ.தே. முன்னணித் தரப்பு அதற்குப் பதில் காய் நகர்த்தலை முன்னெடுத்தது.

அதுதான் இவ்விடயம் பற்றிய ஆராய்வதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமனம்.

அவசர அவசரமாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமித்து, அதன் அமர்வுகளைப் பகிரங்கமாக நடத்தி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அதற்கு அழைத்து , குறுக்கு மறுக்காகக் கேள்விக் கணைகளைத் தொடுப்பதன் மூலம் உண்மைகளைக் கக்க வைத்து விடயங்களை அம்பலப்படுத்தச் செய்வது ஐ.தே. முன்னணி தரப்பின் திட்டம்.

ஏப்ரல் 21 ஆம் திகதி தாக்குதல்கள் நடைபெற்ற நாள் முதல் நேற்றுமுன்தினம் வரை ஜனாதிபதியும் அவரது அதிகார மட்டமும் விடுத்த – வெளிப்படுத்திய – செய்திகளே வெளிவந்து கொண்டிருந்தன.

ஆனால், இவ்வார ஆரம்பத்தில் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் பகிரங்க அமர்வு நடைபெறத் தொடங்கியதும், அதிகாரிகள் வாயினால் உண்மைகள் பகிரங்கமாகத் தொடங்கி இருக்கின்றன.

ஒரு வகையில் பார்த்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உண்மைகளை ஒப்புவிக்க நல்லதோர் தளத்தை இந்த நாடாளுமன்ற தெரிவுக் குழு பகிரங்கமாக ஏற்படுத்தி கொடுத்திருக்கின்றது என்றாலும், நாட்டின் புலனாய்வுத் துறை சார்ந்த விடயங்களை இப்படிப் பகிரங்க வெளியில் பிய்த்துப் பிடுங்கி உதறிப் பரகசியமாக்குவது சரியானதா, நியாயமானதா, பொருத்தமானதா என்ற கேள்வி எழாமல் இல்லை.

நாமல்குமார என்ற நபர் வெளியிட்ட ஒரு தகவலின் அடிப்படையில் அதுவரை பயங்கரவாத விசாரணை பிரிவின் பணிப்பாளராக இருந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக்க டி சில்வா கைது செய்யப்பட்டார். இவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருங்கியவர், மிகவும் வேண்டப்பட்டவர் என்று கூறப்படுகின்றது.

தம்மையும், முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவையும் படுகொலை செய்வதற்கு நாலக்க டி சில்வா திட்டமிட்டார் என்ற குற்றச்சாட்டை வைத்து அரசியல் காய் நகர்த்தினார் ஜனாதிபதி மைத்திரிபால.

கூட்டங்கள் தோறும் அது குறித்துப் பேசினார். பிரதிப் பொலிஸ் மா அதிபரான நாலக்க சில்வா விளக்க மறியலில் இருக்க, அவர் பதில் கூற முடியாத நிலையில், அவரை வாங்கு வாங்கென்று வாங்கித் தள்ளினார் ஜனாதிபதி. அவர் மூலம் பிரதமரை நெட்டித் தள்ளுவதாக நினைத்துக் கொண்டார் மைத்திரி.

இப்போது நாலக்க டி சில்வாவை பிணையில் வெளியில் விட்டு விட்டது நீதிமன்றம்.

அவரை விசாரணைக்கு அழைத்து இருக்கின்றது நாடாளுமன்ற தெரிவுக் குழு. இனி என்ன ? நாலக்க டி சில்வாவுக்கு ஒரு பகிரங்க மேடை கொடுத்தாயிற்று.

ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதலின் சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசீமைக் கைது செய்வதற்கு தாம் எடுத்த முயற்சிகளில் தொடங்கி, தம்மை கைது செய்து சிறையில் வைத்தமை மூலம் அந்த நடவடிக்கையை ஜனாதிபதி தரப்பு தடுத்து, நாட்டின் பேரழிவுக்கு எவ்வாறு காரணமாயிற்று என்பது வரை பரகசியப்படுத்த அவருக்கு வாய்ப்புக் கிட்டிவிட்டது.

அதற்குரிய பதில் ஜனாதிபதி தரப்பில் அறிக்கையாக வரும் என எதிர்பார்க்கலாம்.

இப்படி நாட்டின் தேசியப் பிரச்சினை, நமது தரப்புகளின் அரசியல் பிரச்சினையாக மாற்றப்பட்டு நிழல் யுத்தம் தொடருவது தவிர்க்க முடியாததாகத்தான் இருக்கும் போல.

# மார்க்கக் கல்வியைப் பறிக்கும் எவ்வித நடவடிக்கையையும் ஏற்கவே முடியாது!

## கிழக்கு முன்னாள் முதல்வர் நஸீர் திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 01

இலங்கையிலுள்ள அனைத்து மதங்களும் தத்தமது மதம் சார்ந்த கல்விகளைச் சிறுபிராயம் முதல் குழந்தைகளுக்கு வழங்கி வருகின்றன. அவ்வாறே முஸ்லிம்களின் மார்க்கக் கல்வியும் மத்ரஸாக்கள் மூலமாக வழங்கப்படுகின்றன. இந்தக் கல்விப் போதனைகள் அவர்களை நல்வழிப்படுத்தி நற்பிரஜைகளாக வாழ வழிகோலுகின்றன. இத்தகைய நிலையில் முஸ்லிம்களது மார்க்கக் கல்வியைப் பறிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைக்கும் நாம் துணைபோக முடியாது. பிரதான எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன மத்ரஸாக்களை கல்வி அமைச்சின்கீழ்கொண்டுவராமல் அவற்றைத் தடை செய்யுங்கள் எனக் கூறியிருப்பது அவரது அப்பட்டமான இனவிரோதக் கருத்தாகவே இருக்கின்றது.

– இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

மத்ரஸாக்களை கல்வி அமைச்சு மற்றும் முஸ்லிம் கலாசார அமைச்சு அகியவற்றின் கீழ் கொண்டு வருவது தொடர்பாகப் பிரதமர் நடவடிக்கை எடுத்து வருகின்றார். இவ்விடயம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே பந்துல குணவர்த்தன இக்கருத்தை முன்வைத்துள்ளார்.



'இஸ்லாமிய மற்றும் அரபுக் கற்கை நெறிகளை அடிப்படையாகக் கொண்ட மத்ரஸாக்கள் அனைத்தும் நாடு தழுவிய ரீதியில் சட்டவிரோதமான முறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன' எனத் தெரிவிக்கும் அவர், 'இவற்றை கல்வி அமைச்சு, முஸ்லிம் கலாசார அமைச்சு ஆகியவற்றின் கீழ் கொண்டு வருவது எந்தவித மாற்றங்களையும் கொண்டுவராது. இது குறுகிய கால தீர்வாகவே அமையும். எனவே, இவற்றை தடை செய்ய வேண்டும்' எனத் தெரிவித்திருக்கின்றார்.

மதங்களுக்கிடையிலான ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் நஞ்சை ஊட்டும் இவ்வாறான கருத்துகள் பெரும் ஆபத்தை ஏற்படுத்தும்.

அரசு மத்ரஸாக்களைப் பாரமெடுத்து அவற்றை உரிய முறையில் செயற்படச் செய்ய அவற்றுக்கான பொருளாதார மற்றும் பௌதீக வள உதவிகளை நல்குமாயின் நாம் அவற்றைவரவேற்கலாம். அதை விடுத்து ஒரு மதத்தின் மார்க்கக் கல்வியைச் சீர்குலைக்கும் நோக்குடன் அவற்றைத் தடை செய்ய முயலுமானால் அவற்றுக்கு இடமளிக்க முடியாது.

ஒவ்வொரு மதமும் தமது மதக் கல்வியைப் பயிற்றுவிக்கவும் அதனூடாக மதபோதகர்களை உருவாக்கவும். உயர்தரக் கல்விகளை வழங்கி வருகின்றன. பௌத்த மதத்துக்குகென நம்நாட்டில் பல்கலைக்கழகங்கள், பிரிவினாக்கள் கூட இருக்கின்றன. அதுபோல் ஏனைய மதங்களும் தமது மதக் கல்விகளை மேற்கொள்ள உரிமைகள் உடையனவாக இருக்கின்றன.

இந்தநிலையில், அண்மையில் முஸ்லிம் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு குழு மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான சம்பவத்தைத் தொடர்ந்து ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையும் வேரறுக்கும் செயற்பாடுகள் முடுக்கி விடப்படுகின்றமை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல. இந்த விடயத்தில் அரசியல்வாதிகள் தமது அரசியல் இலாபம் கருதி செயற்பட முனைவது கண்டனத்துக்குரிய ஒன்றாகும்.

எனவே, முஸ்லிம்களின் மார்க்கக்கல்வி விடயத்தில் அரசு அவதானமாக தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன். – என்றுள்ளது. (ஐ)

# அமைச்சுப் பதவியில் இருந்து ரிஷாத் உடன் விலகவேண்டும்

## சம்பிக்க ரணவக்க போர்க்கொடி

கொழும்பு, ஜூன் 01

உயிர்த்தஞாயிறுத்தாக்குதல்களை நடத்திய தற்கொலைதாரிகளுடன் தொடர்புகளைப் பேணினார் என்ற குற்றச்சாட்டுகளுக்கு முகம்கொடுத்துள்ள அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உடனடியாக அமைச்சுப் பதவியிலிருந்து விலகவேண்டும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் மேற்கொள்ளப்படும் அனைத்து விசாரணைகளுக்கும் அமைச்சர் ரிஷாத் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி தான் ஒரு நிரபராதி என்பதையும் நிரூபிக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ள அமைச்சர் சம்பிக்க ரணவக்க, நாடாளுமன்றினால் பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் விசாரணைகளை மேற்கொள்ள முடியாது என்றும் கூறினார்.

கொழும்பிலுள்ள ஜாதிக்க ஹெல உறுமயவின் தலைமை அலுவலகத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றத்தில் இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்று அமைச்சர் ரிஷாத்பதியுதீனுக்கு எதிரானதாக இருக்கின்றது. ஜே.வி.பி ஒட்டுமொத்த அரசுக்கு எதிராக மற்றையதைக் கொண்டுவந்துள்ளது.

இதற்கமைய முதலில் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை உடனடியாக விவாதத்துக்கு எடுத்து அது தொடர்பில் நாடாளுமன்றில் வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. மற்றையது அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணையில் அமைச்சருக்கு பயங்கரவாத அமைப்பினருடன் தொடர்புகள் இருந்ததாகப் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவர் மீது முன்வைக்கப்பட்டுள்ள 10 குற்றச்சாட்டுக்களில் பெரும்பாலானவை பாரதூரமான குற்றங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்கள். பயங்கரவாதத்துக்கு நிதி திரட்டினார் எனவும், பயங்கரவாதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினார் எனவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கு நாடாளுமன்றில் நடத்தும் விவாதங்களைக் கொண்டுதீர்வு காண முடியாது. பொலிஸாரினாலும் அதே வேளை அரச புலனாய்வுத் துறைகளினாலும் முறையான விசாரணைகள் மேற்கொண்டு அவை நீதிமன்றின் ஊடாக விசாரிக்கப்படவேண்டும். இவை அரசியல் ரீதியாக குரல் கொடுக்கக் கூடிய பிரச்சினைகளும் அல்ல. ஏனெனில் அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் மிக மிகப் பாரதூரமானவை.

இதற்கமைய அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விசாரணைகள் சுயாதீனமாகவும், எந்தவித அழுத்தங்களும் இன்றி இடம்பெறுகின்றன என்பதை நிரூபிக்கவேண்டுமானால் முதலில் அமைச்சர் ரிஷாத் தனது அமைச்சுப் பதவியிலிருந்து விலகி விசாரணைகளுக்கு ஒத்துழைக்க வேண்டும் – என்றார். (ஐ)

### நாளை

02.06.2019
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: திரியோதசி பி.ப. 05.09 வரை.
திதி : பரணி பி.இ.12.54 வரை.
இராகுகாலம் : 08.52 – 10.22
சுப நேரம் : 02.52 – 04.22

# ஞானசாரரின் குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கிறது முஸ்லிம் கவுன்சில்

கொழும்பு, ஜூன் 01

ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்சிலின் பிரதிநிதிகள் சிலர் பயங்கரவாதத் தலைவர் ஒருவரைச் சந்தித்தனர் என கலகொடஅத்தே ஞானசார தேரர் தனியார் தொலைக் காட்சி நிகழ்ச்சியொன்றில் முன்வைத்த குற்றச்சாட்டுக் களை இலங்கை முஸ்லிம் கவுன்சில் முற்றாக நிராகரித் துள்ளது.

இது தொடர்பில் முஸ்லிம் கவுன்சில் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு: –

2013 ஆம் ஆண்டில் கட்டார் நாட்டில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் கட்டார் நாட்டு அரச தலைவரின் ஆலோச கராகச் செயற்படும் மார்க்க அறிஞர் ஒருவரான யூசுப் அல் கர்ளாவி அந்த மாநாட் டின்போது எமது அமைப்பின் பிரதிநிதிகளைச் சந்தித்தார்.

அந்தச் சந்திப்பு எவ்வித இரகசியமான ஒரு சந்திப்பாக இருக்கவில்லை. கலகொட அத்தே ஞானசார தேரரி னால் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் காண்பிக்கப் பட்ட புகைப் படம் 2013 ஆம் ஆண்டில் எமது அமைப்பி னால் ஊடகங்களுக்கு வெளி யிடப்பட்டுப் பத்திரிகை களில் வெளியான புகைப்பட மாகும்.

யூசுப் அல் கர்ளாவி என் பவர் அல்ஜஸீரா தொலைக் காட்சியினால் ஒளிபரப்பப் படும் மிகவும் பிரபல்யமான நிகழ்ச்சியொன்றை நடத்து பவரும், தற்பொழுது கட்டார் அரசின் மற்றும் கட்டார் அரச தலைவரின் ஆலோசகரில் ஒருவராகச் செயற்படும் மார்க்க அறிஞருமாவார்.

அந்தச் சந்திப்பின்போது அவர் எமது அமைப்பிடம் தெரிவித்த விடயம், இலங்கை முஸ்லிம்கள் இலங்கையில் பெரும்பான்மையினரான பௌத்த மக்களுடன் ஒத்து ழைப்புடன் செயற்பட வேண்டும் என்பதே. அவ் விடயம் பத்திரிகைகளிலும் தெளிவாகக் குறிப்பிடப்பட் டுள்ளது.

இலங்கையில் முஸ்லிம் சமூகத்துக்குத் தேவையான சீர்திருத்தங்களை மேற் கொண்டு அனைத்து வித மான தீவிரவாதங்களையும் நிராகரித்து இலங்கையர் என்ற அடையாளத்தைக் கட்டியெழுப்ப தற்பொழுது எமது அமைப்பு கடும் பிரயத் தனம் எடுத்து செயற்படும் இத்தருணத்தில் இவ்வாறான பொய்யான குற்றச்சாட்டுக் களை முன்வைத்து அந்த வேலைத்திட்டங்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்த வேண்டாம் என நாம் அனைத்து தரப்பினரிடமும் வேண்டிக் கொள்கிறோம் – என்றுள்ளது. (ஐ)

# தேசிய பாதுகாப்பு விடயங்களை ஊடகங்களுக்கு வழங்கவேண்டாம்

## நிமல் சிறிபால டி சில்வா கோரிக்கை

கொழும்பு, ஜூன் 01

தேசிய பாதுகாப்புடன் தொடர்பான விடயங்களை பகிரங்கப்படுத்துவது தவறான நடவடிக்கையாகும் என எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புடன் சம்பந் தப்பட்ட தகவல்களை குறிப்பிட்ட சிலரே அறிந்திருக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இடம்பெறும் விசாரணைகளை ஊடகங்களில் நேரடியாக ஒளிபரப்புவதை உடன் நிறுத்துமாறு சபாநாயகரைக் கேட்டுக் கொள்வதாக நாடாளு மன்ற உறுப்பினர் துமிந்த திஸா நாயக்க வேண்டுகோள் விடுத் துள்ளார். (ஐ)

# கடவுச் சீட்டுக் கட்டணம் உயர்வு

*கொழும்பு, ஜூன் 01*

*கடவுச்சீட்டுகளுக் கான கட்டணம் இன்று முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்படவுள் ளது.*

*சாதாரண சேவை யில் 3500 ரூபாவைச் செலுத்தியும் ஒரு நாள் சேவையில் 15 ஆயிரம் ரூபாவைச் செலுத்தி யும் கடவுச்சீட்டு பெறலா மெனக் குடிவரவு குடிய கல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)*

# புதிய சமுர்த்திப் பயனாளிகளுக்கான உரித்துப் படிவம் வழங்கும் நிகழ்வு

## *ரணில் தலைமையில் நாளை யாழ் நகரில்*

யாழ்ப்பாணம், ஜூன்.01

யாழ் மாவட்டத்தில் சமுர்த்தி நிவாரணம் பெற தகுதியுள் ளவர்களாக 23011 பயனாளி கள் தெரிவு செய்யப்பட்டுள் ளார்கள். இவர்களுக்கு 4,500 பயனாளிகளுக்கு உரித் துப்படிவம் வழங்கும் நிகழ் வாளது நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ், மாநகரசபை மைதா னத்தில் பிரதமர் ரணில் விக் கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ் வில் ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் தயாகமகே மற் றும் நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## றமழான் நற்சிந்தனைகள்



றமழானின் இறுதிப் பத்து நாள்களில் இரவில் தினமும் இரண்டு ரகாஅத் தொழுது கொள்ளுங் கள். அது லைலத்துல் கத்ர் இரவில் அமைந்து விட் டால் 83 வருடங்கள் தின மும் தொழுத நன்மை யைப் பெற்றுக் கொள் வீர்கள்.

**நோன்பு திறக்கும் நேரம் மாலை 6.17**

**ஸஹர் முடிவு அதிகாலை 4.22**

(எம்.எல்.லாபிர்)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூன் 01

பக்கமூன – தியபெதும 5ஆம்கட்டைவணப்பிரதேசத் தில் பகமூன பொலிஸ் குழு வினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது துப்பாக்கி ஒன்று மற்றும் அதற்குப் பயன்படுத்தும் 2 ரவைகள் என்பவற்றுடன் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

28 வயதுடைய கிரிதலை பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு வரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளார் எனவும், சந்தே கநபர் நேற்று ஹிங்குரக் கொட நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளார் என வும் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (ஐ)




நயினாதீவு – ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை

பதிவு இல S236 (வரைவுள்ளது) ஆரம்பம்– 1960

விசேட அறிவித்தல்

நயினாதீவு, அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் திருவருளினால் 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை அமுதசுரபி என்னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின் ' கண்ணே ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்குச் சிறந்த முறையில் அன்னதானத் தொண்டினைச் செய்து வருகின்றது. இவ்வாண்டுடன் 60ஆவது மணிவிழா ஆண்டில் பிரவேசிப் பதில் மனமகிழ்வெய்துகிறோம்.

அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத்தொண்டு சிறந்த சேவையெனக் கருதி தரும் சீலர்களாகிய வர்த்தகப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள் அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம், பொருள், உதவி செய்து வருவதுடன் ஆக்கமும், ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வருகின்றனர்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப்பெற்ற இச்சேவையைச் சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப் பினர்களுக்கும், நற்சேவைத் தொண்டர்களுடன், மண்டபத்திற்கு வந்து பணி செய்யும் அடியார்களுக்கும், தத்தம் கடமைகளைத் திறமையாக செய்த, செய்கின்ற சேவை யாளர்களுக்கும், அன்னதானத் தொண்டினை நேரடியாகக் கண்டும், கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதான பணி சிறப்புற நடைபெறப் பணம், பொருள் முதலியவற்றை மனமுவந்து உதவி வரும் தருமசீலர்களுக்கும் எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம் பிகையின் க திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையின் பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**விகாரி ஆண்டு ஆனித்திங்கள் 17 ஆம் நாள் 02.07.2019 செவ்வாய்க்கிழமை அம்பாளின் மகோற்சவம் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி ஆனித் திங்கள் 26ஆம் நாள் 11.07.2019 வியாழக்கிழமை மஞ்சத் திருவிழாவும், ஆனித் திங்கள் 27 ஆம் நாள் 12.07.2017 வெள்ளிக்கிழமை தண்டிகைத் திருவிழாவும், ஆனித்திங்கள் 29 ஆம் நாள் 14.07.2019 ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும், ஆனித்திங்கள் 30 ஆம் நாள் 15.07.2019 திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், ஆனித்திங்கள் 31ஆம் நாள் 16.07.2019 செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும், ஆடித்திங்கள் 01 ஆம் நாள் 17.07.2019 புதன்கிழமை தெப்பத்திருவிழாவும்** நடைபெற திருவருள் பாலித்திருப்பதால் :அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்களுக்கு வழமைபோல் சிறந்த முறையில் இரவும் பகலும் அன்னதானம் வழங்கச் சபையினர் தீர்மானித்துள்ளனர். எனவே தருமசீலர்களாகிய தங்களிடம் வரும் அன்னதான சபையால் நியமிக்கப்பட்ட தொண்டர்களிடம் வழமைபோல் நீங்கள் உதவும் பணம், பொருள் முதலியவற்றை வழங்கி சபையின் பற்றுச் சீட்டைப்பெற்றுக்கொள்ளும் வண் ணம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**13.07.2019 மணி விழா நிகழ்வு மாலையில் இடம்பெறும்**

**நேரடியாக பணம் அனுப்ப விரும்பும் அடியார்கள் Commercial Bank கணக்கு இல. 1247985001 புறக்கோட்டை வங்கிக்கு அல்லது இலங்கை வங்கி கணக்கு இல.7687836 வேலணை வங்கிக்கும் அனுப்பி வைக்கலாம் என்பதை தெரிவிக்கின்றோம்.**

அம்பிகையின் திருப்பதியிலே அடியார்கள் தங்கி நின்று தரிசிப்பதற்கான வசதிகளுடன் கூடிய அமுதசுரபி அன்னபூரணி இறைப்பணிகள் இல்லம் அமைக்கப்பெற்றுள்ளதென்பதையும் மனமகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

*** நேரடியாக பணம், பொருள் கொடுக்க விரும்பும் அன்பர்கள் யாழ்ப்பாணம் சிவகுமார் வெற்றிலைக் கடையிலும், திருநெல்வேலி மார்க்கெட் தேனு களஞ்சியத்திலும் கையளிக்கலாம்.**

ம.அம்பிகைபாகன் – செயலாளர்
2ம் வட்டாரம், நயினாதீவு
தொலைபேசி : 021 321 3575, 077 735 0380

# மோடியின் அமைச்சரவை பதவியேற்றது தமிழ்நாட்டின் ஜெய்சங்கருக்கும் இடம்!

## வெளிவிவகாரச் செயலராக இலங்கை விவகாரத்தைக் கையாண்டவர்


மீண்டும் பிரதமராகப் பதவியேற்கும் மோடி.


பதவிப் பிரமாணம் செய்து வைக்கும் இந்திய ஜனாதிபதியும் பதவியேற்ற அமைச்சர்களும்

இந்தியாவின் 16 ஆவது பிரதமராக நரேந்திர மோடி (வயது 68) வியாழக்கிழமை பதவியேற்றார்.

டில்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற பிரம்மாண்ட நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவருக்கு பதவிப் பிரமாணமும், இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். இதன் மூலம் மோடி தொடர்ந்து இரண்டாவது முறையாகப் பிரதமர் பதவியேற்றுள்ளார். பிரதமரைத் தொடர்ந்து 57 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர்.

இரவு 7 மணிக்கு தேசிய கீதத்துடன் பதவியேற்பு நிகழ்ச்சி தொடங்கியது. முதலில் பிரதமர் மோடி பதவியேற்றார். அவரைத்தொடர்ந்து ராஜ்நாத் சிங், அமித் ஷா, நிதின் கட் கரி, சதானந்த கௌடா, நிர்மலா சீதாராமன் உள்ளிட்ட 57 அமைச்சர்களும் பதவியேற்றனர். உள்நாடுமற்றும்வெளிநாடுகளைச் சேர்ந்த முக்கியத் தலைவர்கள் மற்றும் பல்துறை பிரமுகர்கள் முன்னிலையில் இந்தப் பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதற்கு முன்பு எந்தவொரு பிரதமரின் பதவியேற்பு நிகழ்ச்சியிலும் இல்லாத அளவுக்கு இந்த நிகழ்ச்சியில் 8,000 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். பதவியேற்புக்காக குடியரசுத் தலைவர் மாளிகையின் வெளிமுற்றத்தில் சிறப்பு மேடை அமைக்கப்பட்டிருந்தது.

பிரதமர் மோடி, ராஜ்நாத் சிங், அமித் ஷா, கட்கரி, ராம்விலாஸ் பாஸ்வான் ஆகியோர் ஹிந்தியில் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டனர். சதானந்த கௌடா, நிர்மலா சீதாராமன் ஆகியோர் ஆங்கிலத்தில் பதவிப் பிரமாணம் எடுத்தனர். முதலில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும், அடுத்துத் தனிப் பொறுப்புடன் கூடிய இணையமைச்சர்களும், அதைத்தொடர்ந்து இணையமைச்சர்களும் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர். இரவு 7 மணிக்கு தொடங்கிய பதவியேற்பு நிகழ்ச்சி 9 மணியளவில் நிறைவடைந்தது.

மத்திய அமைச்சரவையில் பிரதமர் மோடிஉடன் 24 அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளனர். 9 பேர் தனிப்பொறுப்புடன் கூடிய இணையமைச்சர்களாகவும், 24 பேர் இணையமைச்சர்களாகவும் பதவியேற்றனர்.

புதிய அமைச்சரவையில் 6 பெண்களும் இடம் பெற்றுள்ளனர். மத்திய அமைச்சரவையில் மொத்தம் 80 அமைச்சர்கள் இடம் பெற முடியும். மக்களவை உறுப்பினர் எண்ணிக்கையில் 15 சதவீதம் பேர் அமைச்சராகலாம் என்பது விதியாகும். எனினும், இப்போது மோடியுடன் சேர்த்து 58 பேர் அமைச்சரவையில் உள்ளனர்.

பா.ஜ.க. தேசியத் தலைவர் அமித் ா அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார். அவர் இப்போதுதான் முதல்முறையாக மத்திய அமைச்சராகியுள்ளார். இதற்கு முன்பு குஜராத்தில் மோடி முதல்வராக இருந்தபோது மாநில அமைச்சராக அமித் ஷா பதவி வகித்துள்ளார். மக்களவைத்தேர்தலில்பா.ஜ.கவின் வெற்றியில் அமித் ஷாவின் பங்கு முக்கியமானது. எனவே, அவருக்கு கூடுதல் கௌரவம் அளிக்கும் வகையில் மத்திய அமைச்சர் பதவி அளிக்கப்பட்டுள்ளது என்று பா.ஜ.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னாள் வெளியுறவுத் துறை செயலர் எஸ்.ஜெய்சங்கர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்.

தமிழகத்தை பூர்விகமாகக் கொண்ட எஸ்.ஜெய்சங்கர் இந்திய இராஜதந்திர சேவை அதிகாரியாவார். 2015 முதல் 2018 வரை மத்திய வெளியுறவுச் செயலராகப் பணியாற்றியுள்ளார். அமெரிக்கா, சீனா, செக் குடியரசு நாடுகளில் இந்தியத் தூதராகவும் இருந்துள்ளார். இந்திய – அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தில் முக்கியப் பங்கு வகித்தார். ஜெய்சங்கரின் தந்தை சுப்பிரமணியம் ஐ.ஏ.எஸ். அதிகாரியாவார். அவரது சொந்த ஊர் திருச்சி.

ஜெய்சங்கர் வெளிவிவகாரச் செயலராகப் பணி புரிந்த வேளையில் இலங்கை விடயத்தைக் கையாண்டவர் என்பதும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர்களோடு நன்கு பரிச்சயமானவர் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

இவர், சங்கர் தயாள் சர்மா குடியரசுத் தலைவராக இருந்த போது அவருடைய ஊடகச் செயலாளராகத்தனது அரசுப்பணியைத் தொடங்கினார். இவர் பத்மஶ்ரீ விருது பெற்றவராவார்.

# முன்னுரிமை வர்த்தக நாடு என்ற தகுதியை இழக்கின்றது இந்தியா!

புதுடில்லி, ஜுன் 01

இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை வர்த்தக நாடு என்ற தகுதியை அமெரிக்கா இரத்து செய்யவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் இக்கருத்தில் மாற்றம் இருக்காதென அந்நாட்டு வெளியுறவுத் துறை மூத்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

வர்த்தக ரீதியில் குறிப்பிட்ட நாடுகள் பயன்பெறும் வகையில் அமெரிக்கா ஜி.எஸ்.பி எனப்படும் பொது முன்னுரிமைத் திட்டத்தை செயற்படுத்துகின்றது.

உள்நாட்டுச் சந்தையைச் சமமாகவும் நியாயமாகவும் அணுக அமெரிக்காவை அனுமதிக்கவேண்டுமென்ற அளவுகோலின் அடிப்படையில் ஜி.எஸ்.பி திட்டத்துக்கு இந்தியா தகுதி பெற்றுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் வரும் முன்னுரிமை வர்த்தக நாடுகள், அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுகின்றது.

இந்தியச் சந்தையைச் சமமாக அணுக அனுமதியளிக்கவில்லையென கூறி, இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை வர்த்தக நாடு என்ற தகுதியை திரும்பிப் பெறவுள்ளதாக கடந்த மாதம் டொனால்ட் டிரம்ப் அறிவித்தார். அந்த அறிவிப்பில் மாற்றம் இருக்காதென அமெரிக்காவின் வெளியுறவுத்துறை மூத்த அதிகாரியொருவர் தற்போது தெரிவித்துள்ளார். (ஐ)

# மோடியின் அமைச்சரவையில் காணாமல் போன பிரபலங்கள்

புதுடில்லி,

பிரதமர் மோடியின் அமைச்சரவையில் அருண் ஜெட்லி, சுஷ்மா சுவராஜ் உள்ளிட்ட முக்கிய தலைவர்களின் இம் முறை இடம் பெறவில்லை. மத்திய அமைச்சரவையில் முதன்முறையாக அமித் ஷா இடம்பெற்றிருக்கிறார். மோடியின் முதல் 5 ஆண்டு கால ஆட்சியில் முக்கிய பொறுப்புகளை வகித்த அமைச்சர்கள் சிலர் இம்முறை அமைச்சரவையில் இடம் பெறவில்லை. அவர்கள் யார் என்பதைப் பார்க்கலாம்.

### அருண் ஜெட்லி



முன்னாள் மத்திய நியமைச்சராக இருந்த அருண் ஜெட்லிக்கு உடல் நலம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கடந்த 18 மாதங்களாக கடும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சியில் முக்கியப் புள்ளியாக இருந்த அருண் ஜெட்லி, அமைச்சரவையின் அதி முக்கிய முடிவுகளை வெளியிட்டவர் ஆவார். 66வயதான அவருக்கு சிறுநீரகமாற்று அறுவை சிகிச்சை கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இதனால் இடைக்கால பட்ஜெட்டை கடந்த பெப்ரவரியில் தாக்கல் செய்யாத அவர் அமெரிக்காவில் சிகிச்சை பெற சென்றிருந்தார்.



### சுஷ்மா சுவராஜ்

மோடியின் முந்தைய ஆட்சியில் வெளியுறவுத்துறை அமைச்சராக சுஷ்மா சுவராஜ் இருந்தார். பா.ஜ.கவின் மிக முக்கிய மூத்த தலைவர்களில் ஒருவராகவும் திகழும் சுஷ்மா சுவராஜ் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பதவி யேற்பு விழாவில் வெறும் பார் வையாளராக மட்டுமே கலந்து கொண்டார். 67 வயதாகும் சுஷ்மா சுவராஜ் சமூக வலைத்தளத்தில் மிகவும் பிரபலமான மத்திய அமைச்சராக இருந்தார். சுஷ்மா சுவராஜும் தனது உடல் நிலையைக் காரணம் காட்டி தனக்குப் பொறுப்பு வேண்டாம் எனக் கூறினார் எனச் சொல்லப்பட்டது.

### ராஜ்யவர்தன் ரத்தோர்



ஒலிம்பிக் துப்பாக்கிச்சுடுதல் போட் டியில் பதக்கம் வென்றவரான ராஜ்யவர்தன் ரத்தோர், கடந்த ஆட்சியில் விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்தார். 49 வயதான அவருக்கு இந்த ஆட்சியில் அமைச்சர் பொறுப்பு வழங்கப்படவில்லை. முன்னாள் இராணுவ வீரரான ரத்தோர், சொந்த மாநிலமான ராஜஸ்தானில் போட்டியிட்டு 2 ஆவது முறையாக மக்களவைக்கு தேர்வு செய்யப்பட்டிருந்தார்.

### ஜெயந்த் சின்ஹா



மோடியின் முந்தைய அமைச் சரவையில், விமானப் போக்கு வரத்து துறை இணை அமைச்சராக பதவி வகித்தவர் ஜெயந்த் சின்கா. தற்போது அமைச்சர் பொறுப்பு வாங்கப்படவில்லை. முதலில் அவர் நிதித்துறை இணை அமைச்சராகத் தான் இருந்தார். பின்னர் அவருக்கு விமானப் போக்குவரத்து துறை வழங்கப்பட்டது. இவரது தந்தை பாஜகவின் மூத்த தலைவர் யஷ்வந்த் சின்ஹா என்பது குறிப்பிடத்தக்கது.

### ஜே.பி. நட்டா



ஜே.பி.நட்டா சுகாதாரத்துறை அமைச்சராகமோடியின்முந்தைய அமைச்சரவையில் இடம் பெற்று இருந்தார். இமாச்சல பிரதேசத்தில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்வு செய்யப்பட்ட ஜே.பி. நட்டாவுக்கு இந்த முறை அமைச்சர் பொறுப்பு வழங்கப் படவில்லை. பா.ஜ.கவின் தேசியத் தலைவராக இருக்கும் அமித் ஷா இப்போது மத்திய அமைச்சராகிவிட்டமையால் கட்சியின் புதிய தேசியத் தலைவராக இவர் தேர்வு செய்யப்படலாம் எனப் பரவலாக ஊகங்கள் எழுவது குறிப்பிடத்தக்கது.



# கூட்டு அரசுக்கு இணக்கம் வராததால் இஸ்ரேலில் மீண்டும் பொதுத் தேர்தல்!

## நாடாளுமன்றத்தில் தீர்மானம்; செப்டெம்பரில் மீளப் பலப்பரீட்சை

ஜெருசலேம்,ஜூன்01

ஆறு வாரங்களுக்கு முன்னர் தேர்தல் நடந்த இஸ்ரேலில் பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகுவால் கூட்டணி அரசு அமைக்க முடியாமல் போனமையால் அந்த நாட்டு நாடாளுமன்றம் கலைக் கப்படுகிறது. இதையடுத்து அங்கு செப்டம் பர் மாதம் மீண்டும் தேர்தல் நடக்கிறது.

120 இடங்களை கொண்ட இஸ்ரேல் நாடாளுமன்றத்துக்கு ஏப்ரல் மாதம் தேர் தல் நடந்தது.

கடந்த 13 ஆண்டுகளாக பிரதமர் பதவியில் நீடிக்கும் பெஞ்சமின் நெத்தனி யாகு ஐந்தாவது தடவையாகப் பத வியை தக்கவைத்துக்கொள்ள இந்த தேர் தலில் போட்டியிட்டார்.

இந்த தேர்தலில் யூதர்களுக்கு ஆத ரவான வலதுசாரி கட்சியான லிகுட் கட்சி சார்பில் களம் இறங்கி உள்ள பெஞ்சமின் நெத்தனியாகு மற்றும் மையவாத நீல வெள்ளை கூட்டணியின் தலைவரான ஓய்வுபெற்ற ஜெனரல் பென்னி கான்ட்ஸ் இடையே கடும் போட்டி நிலவியது.

எப்படி இருந்தாலும், இரு தரப்பிற்கும் பெரும்பான்மை கிடைக்காது என்றும், கூட்டணி அரசு அமைவதற்கே சாத்தியக் கூறுகள் அதிகம் இருப்பதாகவும் தேர்த லுக்கு பிந்திய கருத்துக்கணிப்பு முடிவுகள் தெரிவித்தன.

அதே போல் இந்த தேர்தலில் பெஞ்ச மின் நெத்தனியாகு வெற்றி பெற்ற போதும், ஆட்சி அமைப்பதற்கான பெரும் பான்மை அவருக்கு கிடைக்கவில்லை. அவரது லிகுட் கட்சி 35 இடங்களை மட் டுமே கைப்பற்றியது.

இதனால் வலதுசாரி கூட்டணியை ஏற்படுத்தி ஆட்சி அமைக்க வேண்டிய கட்டாயத்துக்கு பெஞ்சமின் நெத்தனியாகு தள்ளப்பட்டார். கூட்டணியை ஏற்படுத்த அவருக்கு 6 வார காலம் அவகாசம் வழங் கப்பட்டது. அதன்படி கூட்டணி அமைப் பதற்காக வலதுசாரி கட்சிகளுடன் அவர் பேச்சுத் தொடங்கினார்.

ஆனால் இந்தப் பேச்சில் முக்கிய பங்கு வகித்த தேசியவாத கட்சியை சேர்ந்த முன்னாள்ராணுவமந்திரிஅவிக்டோர்லீபர் மேன், தீவிர யூத ஆதரவு கட்சிகள் தங் களின் ராணுவ கட்டுப்பாடுகளை தளர்த்த வேண்டும் என நிபந்தனை விதித்தார்.

இதனை பெஞ்சமின் நெத்தனியாகு எதிர்த்ததால்இருவருக்கும்இடையேமோதல் ஏற்பட்டது. இந்த மோதல் கூட்டணிப் பேச்சில் பின்னடைவை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், கூட்டணியை ஏற்படுத்துவதற்கான காலஅவகாசம் புதனன்று முடிந்தது. இதையடுத்து இது தொடர்பாக பேசி முடிவு எடுக்க அன்று இரவே நாடாளுமன்றம் கூடியது.

அப்போதுநாடாளுமன்றத்தைகலைத்து விட்டு, புதிய தேர்தல் நடத்த முடிவு செய் யப்பட்டது. இது தொடர்பாக நாடாளு மன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில் நாடாளுமன்றத்தை கலைப் பதற்கு ஆதரவாக 74 வாக்குகளும், எதிராக 45 வாக்குகளும் விழுந்தன. அதன்படி நாடாளுமன்றம் கலைக்கப் படுகிறது. செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதி புதிய தேர்தல் நடத்தப்படும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் அதிபர், புதிய அரசை அமைக்க வேறொரு நபரை பிரதமராக தேர்வு செய்துவிடக்கூடாது என்பதற்கா கவே, நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டுப் புதிய தேர்தலை நடத்தும் தீர்மா னத்தை நெத்தனியாகு நிறைவேற்றச் செய்திருக்கிறார் எனக் கூறப்படுகிறது.

இஸ்ரேல் வரலாற்றில் பிரதமரால் கூட் டணி ஏற்படுத்த முடியாமல் நாடாளுமன் றம் கலைக்கப்படுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹங்கேரியில் படகுகள் மோதல் 7 பேர் பலி; 21 பேரைக் காணோம்

ஹங்கேரி நாட்டில் கடந்த புதனன்று இரு படகுகள் நேருக்கு நேர் மோதி கவிழ்ந் ததில் 7 பேர் உயிரிழந்தனர். மேலும் 21 பேரைக் காணோம்.

ஹங்கேரியின் தலைநகரான புடாபெஸ் டில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது.




இதனால், ஆறுகள் நிரம்பி வழியும் நிலையில், அங்குள்ள தனுபே ஆற்றில் தென்கொரிய நாட்டை சேர்ந்த சுற்றுலா பயணிகள் படகு சவாரி செய்தனர். அவர்கள் நடுஆற்றில் படகு பயணம் செய்தபோது, எதிரேவந்தமற்றொரு படகு ஒன்று அவர்களது படகு மீது திடீரென நேருக்கு நேர் மோதி யது. மோதல் இடம் பெற்று ஏழு செக்கன் களில் சுற்றுலாப் பயணிகளின் படகு நீருக் குள் முழுதாக மூழ்கியது.

இதில் படகில் பயணித்த மொத்தம் 35 பேர்களில் 7 பேர் உயிரிழந்தனர் எனவும், மேலும் 21 பேர் மாயமாகி உள்ளனர் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. காணாமல் போனோர் உயிர்பிழைத்திருப் பதற்கு வாய்ப்புகள் இல்லை எனவும் கூறப்பட்டது.

மாயமானவர்களைத் தேடும் பணியில் இரவு, பகலாக பொலிஸார் உள்ளிட்ட மீட்பு குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மற்றைய சிறிய படகின் ஓட்டி கைது செய்யப்பட்டிருக் கின்றார். உக்ரைன் நாட்டவரான அவருக்கு எதிராகக் கிரிமினல் குற்றச்சாட்டு சுமத்தப் பட்டுள்ளது.

# முஷாரபின் உடல்நிலை மோசம் டுபாய் ஆஸ்பத்திரியில் அனுமதி

பாகிஸ்தானின் முன்னாள் அதி பர்பர்வேஷ்முஷாரப்பின்உடல்நிலை மோசமடைந்ததால் நேற்று முன் தினம்அவர்டுபாயில்உள்ளஆஸ்பத் திரியில் அவசர சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டார்.

பர்வேஸ் முஷரப் டுபாயில் வசித்து வருகிறார். இவர் மீது பாகிஸ்தானில் ராஜ துரோகக் குற்ற வழக்குத் தொடரப்பட்டுவிசாரணைநடைபெற்று வந்தது. அவர் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக 2016 ஆம் ஆண்டு டுபாய்க்கு சென்றார். ஆனாலும் அவர் யாருடனும் பேசவோ, சந்திக் கவோ கூடாது என கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. அவரது நரம் புகள் வலுவிழந்து நிற்பதற்கும், நடப்பதற்கும் அவர் சிரமப்பட்டு வந்தார்.

அவர் உடல்நிலை காரணமாக பாகிஸ்தானுக்குச் செல்லமுடியாத நிலையில் இருப்பதால் வழக்கு விசாரணையைத் தள்ளிவைக்க



வேண்டும் என்ற கோரிக்கையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, அவ ருக்கு எதிரான வழக்கை ஏற்கனவே ஒத்திவைத்துள்ளது.

அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்ததால் வியாழனன்று அவர் டுபாயில் உள்ள ஆஸ்பத்தி ரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக் கப்படுகிறது.

# துருக்கி ஐ.எஸ். பயங்கரவாதிகளின் 188 பிள்ளைகளை விடுவித்தது ஈராக்

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் எனச் சந்தே கிக்கப்படுபவர்களின் 188 துருக்கியக் குழந்தைகளை ஈராக் ஒப்படைத்துள்ளதாக நீதித்துறை செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதுகுறித்து நீதிபதி அப்துல் சத்துர் பைரக்தார் புதன்கிழமை தெரிவிக்கையில்; பாக்தாத் விமான நிலையத்தில் துருக்கி மற்றும் ஈராக் அரசாங்க பிரதிநிதிகள் மற் றும் சர்வதேச அமைப்புகள் முன்னிலை களில், இக்குழந்தைகள் ஒப்படைக்கப்பட் டுள்ளனர் என்றார்.

செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகை யில், "இக்குழுக்களில் ஒப்படைக்கப்பட்டவர் களில் சில வளர்ந்த இளைஞர்களும் இருந்தனர்.அவர்கள் எல்லையை சட்டவிரோ தமாக கடந்து சென்றவர்கள் எனக் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள்.

ஐ.எஸ்.ஐ.எஸ். குழுவுடன் போராடிய பெற் றோர்களுக்கோ அல்லது அவர்கள் கட்டுப் பாட்டின் கீழ் வசித்து வருபவர்களுக்கோ பிறந்த நூற்றுக்கணக்கான குழந்தைகளு டன் ஆயிரக்கணக்கான வெளிநாட்டவர் களும் தற்போது ஈராக்கின் நீதித்துறையில் சிக்கியுள்ளனர்" என்றார்.

# அப்பிள் பழ நிறையில் பிறந்து தப்பிப் பிழைத்த பெண் மகவு!



அமெரிக்காவின் கலி போர்னியாவில் உலகிலேயே குறைவான எடை கொண்ட குழந்தை பிறந்துள்ளது.

கலிபோர்னியா மாகா ணத்தில் உள்ள மருத்து வமனை ஒன்றில் வெறும் 245 கிராம் எடையுடன் பெண் குழந்தை பிறந்துள்ளது. பிறந்த போது அப்பிள் பழத் தின் எடையில் இருந்த இந்த குழந்தைதான் உலகிலேயே சிறிய குழந்தை என அறி விக்கப்பட்டுள்ளது.

வழக்கமான கர்ப்ப கால மான 38 வாரங்களில் 23 வாரங்கள் மட்டுமே தாயின் கர்ப்பபையில் இருந்து இந்த குழந்தை, பிறந்து ஒரு மணி நேரத்தில் இறந்துவிடும் என்று மருத்துவர்கள் கூறி யிருக்கின்றனர். ஆனால் பலவீனமான நிலையில் பிறந்த இந்த குழந்தையின் உடல்நலம் தற்போது சீராகி உள்ளது.

தற்போது இந்த குழந்தை 2.2 கிலோகிராம் எடையுடன் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆப்கன் ராணுவ பயிற்சி மையம் தாக்கப்பட்டதில் அறுவர் சாவு!

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள ராணுவ பயிற்சி மையத்தில் நடத்தப்பட்ட தற்கொலைப் படை தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

இதுகுறித்து ஆப்கன் அதிகாரிகள் தரப்பில், ஆப் கன் தலைநகர் காபூலில் உள்ள ராணுவ பயிற்சி மையத்தில் வியாழக்கிழமை தீவிரவாதிகள் தற்கொலைப் படை தாக்குதல் நடத்தி னர். இதில் 6 பேர் பலியா கினர். பலர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர் என்று தெரிவித் துள்ளனர்.

தீவிரவாத தாக் குதலுக்கு உள்ளான பயிற்சி நிலையம் ஆப் கனில் உள்ள மிக முக் கியமான ராணுவ பயிற்சி நிலையங்களில் ஒன்றாகும்.

இந்தத் தாக்குதலை தலிபான்கள் நடத்தி இருக் கலாம் என்று அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ள னர்.

ஆப்கானிஸ்தானில் அரசுப் படைகளுக்கும் தலி பான் களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடை பெற்று வருகிறது. அரசுப் படைகளுக்கு ஆதரவாக அமெரிக்க கூட்டுப்படையும் அங்கு முகாமிட்டு தலிபான் களுக்கு எதிராகச் சண்டை யிட்டு வருகிறது.



# யாழ் நகரில் தீத்தாண்டவம்



# தமிழரின் அறிவுப் புதையலும் எரிக்கப்பட்டு நாசம்

**சிங்கள இனவாதிகளால் நாசமாக்கப்பட்ட தமிழர்களின் சொத்துகளில் ஒன்றான யாழ்,நூலகம் எரிக்கப்பட்ட 38 ஆம் ஆண்டின் நினைவாக இவ்வாக்கம் வெளியிடப்படுகிறது.**

தமிழர்களின் அறிவுப் புதையலாக விளங்கிய யாழ். நூலகத்தை சிங்கள காடையர் கும்பல் தீக்கரையாக்கி 38 ஆண்டுகள் சாம்பலாகிவிட்டது. தென்கிழக்கா சியாவிலேயே மிகப்பெரும் நூலகமாக 97000 புத்தகப் புதையல்களைக் கொண்டு தமிழரின் அறிவுக் கருவூலமாக திகழ்ந்த யாழ் பொது நூலகம் சிங்கள காடையர்களால் 1981 மே 31ஆம் நாள் நள்ளிரவிற்கு மேல் எரித்து சாம்பலாக்கப்பட்டது.

ஒருசிலரது முயற்சியால் சிறு நூலகமாக 1933 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்த யாழ் நூலகம் காலப்போக்கில் தனிப்பட்ட ரீதியில் நூல்ளை சேகரித்து வைத்திருந்தவர்களது பங்களிப்புடன் வளர்ச்சி யடைந்தது. பல்வேறு பழமையான நூல்கள் பழங்காலத்து ஓலைச் சுவடிகள் பத்திரிகைகள் என சேகரிக்கப்பட்டு நூலகம் மேம்படுத்தப்பட்டது.

திட்டமிட்டு தமிழர்களை இனச்சுத்திகரிப்பு செய்து வந்த சிங்கள இனவாதத் தலைமைகளின் கண்ணை உறுத்திக் கொண்டிருந்த தமிழரின் அறிவுப் புதையல்களின் பாதுகாப்பிடமாகத்திகழ்ந்த யாழ் பொது நூலகத்தை முற்றிலுமாக அழித்துவிட தீர்மாணித்து முடித்தும் விட்டார்கள்.

தமிழர்களது விடுதலைப் போராட்டம் தீவிரம் பெற பல்வேறு காரணங்கள் இருந்தாலும் யாழ் நூலகம் எரிக்கப்பட்ட நிகழ்வானது முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது. கல்வித் தரப்படுத்தல் சட்டத்தை கொண்டு வந்து தமிழர்களது உயர்கல்வி வாய்ப்பிற்கு சாவுமணியடித்த சிங்கள இனவாத அரசு ஒட்டுமொத்தமாக தமிழர்களின் அறிவுக் கருவூலத்தை தீக்கிரையாக்கிய சம்பவம் தமிழர்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது.

தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய நூலகத்தை சிங்கள இன வெறி பாசிச அரசின் பேய்யாட்டத்திற்கு பறிகொடுத்து 38 ஆண்டுகள் வரலாற்றில் சாம்பலாகிப் போய்விட்டன. அதனை ஈடுகட்ட ஒவ்வொரு தமிழனும் வரலாற்றை பாதுகாத்து தமிழர் வரலாற்றை மீட்டெடுக்க இந்நாளில் அல்ல எந்நாளும் உறுதி ஏற்க வேண்டும் என வரலாற்றுக் கடமையுணர்வுடன் வேண்டி நிற்கின்றது.

1972 ஆம் ஆண்டு இலங்கை சோலிச குடிரயசு யாப்பினை ஆட்சேபித்தும் நிராகரித்தும் தந்தை செல்வா நிர்ப்பந்தித்து இருந்த காங்கேசன்துறைக்கான நாடாளுமன்ற இடைத்தேர்தலில் தந்தை செல்வாவுக்கு எதிராக நிறுத்தப்பட்ட சிறிமாவோ பண்டார நாயக்கவின் முக்கூட்டரசு வேட்பாளர் தோழர் வ. பொன்னம்பலம் 16,000 அதிகப்படி பெரும்பான்மை வாக்குகளால் தாம் தோற்றகடிக்கப்பட்டதுமே மக்கள் தீர்ப்பை மகேஸ்வரன் தீர்ப்பாக ஏற்றுக்கொண்ட தோழர் பொன்னம்பலம் தாம் சார்ந்த இலங்கைப் பொதுவுடைமைக் கட்சியில் இருந்து தமது சகாக்களுடன் விலகியவராக செந்தமிழர் இயக்கத்தை ஆரம்பித்து தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியில் ஓர் இணைந்த அமைப்பாக அதனையும் இணைத்துக் கொண்டிருந்தார்.

ஆகவே, தந்தை செல்வாவின் மறைவுக்குப் பின் 1977 ஆம் ஆண்டு ஜுலைத் திங்களில் எதிர்வரவிருந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியானது போர்த்துகேயரிடம் போரில் இழக்கப்பட்ட தமிழீழ அரசினை மீள் வித்துப் புதுப்பிப் பதற்கு தமிழீழ வாக்காளரிடம் ஆணை கோரும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக எதிர்கொள்ள முடிவு செய்தது.

எனவே, அந்த ஒரே கோரிக்கையை மட்டுமே பிரஸ்தாபிப்பதாக அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரிப்பதில் தோழர் வ.பொன்னம்பலமும் உரிய பங்களிப்பை நல்கியிருந்தார். சம்பந்தப்பட்ட தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபன வாசகம் உரைத்தவாறு கோரப்பட்ட ஆணையைத் தமிழ் மக்கள் வழங்குமிடத்து தெரிவு செய்யப்படும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு தேசிய நிர்ணய சபையாக அமர்ந்து ஒரு சுதந்திர, இறைமையுள்ள, சோசலிஷ, ஜனநாயக தமிழீழ அரசை நிறுவும் யாப்பை நிறுவி அதனை எய்த முயலும் சமகாலத்தில் இலங்கையின் நாடாளுமன்றத் தையும் மேற்படி இலக்கை எய்துவதற்கான ஒரு மேடையாக உபயோகிப்பார்கள் என்றே உறுதியளித்திருந்தது.

1977 ஆம் ஆண்டு ஜுலைப் பொதுத் தேர்தலின் போது வடகிழக்கு வாழ் வாக்காளர் பதினெட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை மேற்படி கோரிக்கைக்கு ஆதரவாகத் தெரிவு செய்ததன் மூலம் தம்மிடம் கோரப்பட்ட ஆணையை அபரிமிதமாகவே வழங்கியிருந்தனர்.

ஆயினும், தமிழ் வாக்காளரிடம் கோரிப் பெறப்பட்டிருந்த மேற்படி ஆணையை உதாசீனம் செய்தவர்களாக தமிழீழ நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு தேசிய நிர்ணய சபையாக அமர்ந்து சுதந்திர இறைமையுள்ள சோலிஷ ஜனநாயக தமிழீழ அரசிற்கான யாப்பைத் தயாரிக்கும் பணியைத் தவிர்த்து விலக்கியவர்களாக இலங்கை நாடாளுமன் றத்தை வெறும் மேடையாகவே மட்டும் உபயோகிக்க தலைப்பட்டதுடன் நில்லாது இலங்கைப் நாடாளுமன்றத்தில் அதன் யாப்பிற்கு விசுவாசமுள்ள ஓர் எதிர்க் கட்சியாகவும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருந்தனர்.

மேலும், சுதந்திர முறைமையுள்ள சோசலிச ஜனநாயக தமிழீழ அரசை நிர்மாணிப்பதற்கு தங்களை அர்ப்பணித்திருக்க வேண்டிய தமிழர் ஐக்கிய விடு தலைக் கூட்டணியின் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் புறக்கணித்து பிரதமர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் சூழ்ச்சிக்கு இணங்கி மாவட்ட அபிவிருத்திச் சபைகளை இருகரம் நீட்டி ஏற்றுக் கொண்டும் இருந்தனர். இருப்பினும் யாழ். மாநகர முன்னாள் முதல்வர் டாக்டர் ச.அ. தருமலிங்கம் தலைமையில் சுதந்திரன்' ஆசிரியர் கோவை மகேசன், ஈழவேந்தன் போன்றோர் அதனை ஆட்சேபித்து மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் களைப் புறக்கணிக்குமாறு கோரி மக்கள் மத்தியில் பிரசாரம் செய்ய தலைப்பட்டனர். மக்கள் ஆதரவும் அவர்களுக்குச் சார்பாகவே மாறத் தலைப்பட்டது.

அத்தகைய எதிர்ப்புகளின் மத்தியில் 1981 ஆம் ஆண்டு மே 31 ஆம் திகதி யாழ். நாச்சிமார் கோவில் வீதியில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் யாழ். மாநகர முதல்வர் இராஜா விசுவநாதன் தலைமையில் நடந்து கொண்டிருந்த சமயம், தேர்தலை ஆட்சேபித்து ஆயுதக் குழு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத் தால் காவல்துறை உத்தியோகத்தர் ஒரு வர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட மேலும் இருவர் காயமடைந்தனர்.

அதன் நிமித்தம் கட்டுப்பாடுகளை மீறிய காவல்துறையினர் கட்டுமீறி நிகழ்த்திய அனர்த்தங்களால் நாச்சிமார் கோவில் வீதியில் ஆரம்பித்த தீத்தாண்டவம் யாழ். நகரையே தீக்கிரையாக்கிற்று. யாழ். மத்திய பேருந்து நிலையத்தைச் சூழவிருந்த கடைகள் தீயினால் பொசுக்கப்பட்டன. யாழ். பிரதான வீதியில் இருந்த தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பணியகம் எரியுண்டது. பாட்டன் மேதரின் வர்த்தக நிறுவனம் மற்றும் டாக்டர் செபஸ்தியாம் பிள்ளையின் இல்லமும் சேதமுற்றன.

இவை அனைத்திற்கும் மேலாக யாழ்ப்பாணப் நாடாளுமன்ற உறுப்பினர் இல்லம் முழுமையாக எரிந்து சாம்பாராக்கப்பட்டது நாடாளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரனை அவரது மனைவியுடன் அத்தீயில் பொசுக்க மேற்கொள்ளப்பட்ட எத்தனத்தில் இருந்து அற்புதமாக உயிர் பிழைத்த இருவரும் வீட்டின் பின் புற மதிலால் பாய்ந்து ஓடி ஒளிய நேர்ந்தது.

1981ஆம் ஆண்டு மே 31இல் ஆரம்பித்து வைக்கப்பட்ட தீத் தாண்டவம், மறுநாளான ஜுன் முதல் நாளிலும் தொடர்ந்தது. அன்று நிகழ்த்தப்படவிருந்த பண்பாட்டுப் பேரவை நாடும் உலகமும் அறியவராது தடுக்கும் ஓர் எத்தனமாக முழு யாழ்ப்பாண குடாநாட்டிலும் அப்போது வெளிவந்து கொண்டிருந்த ஒரே ஒரு நாளேடான 'ஈழ நாடு' பத்திரிகைப் பணிமனை முதலில் தீக்கிரையாக்கப்பட்டது. முதல் நாள் நிகழ்த்தப்பட்டிருந்த அடாவடித்தனமான அட்டூழியங்களையடுத்து காவல்துறையினர் ஓர் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு ஆணையைப் பிறப்பித்திருந்தது.

ஜுன் 04 ஆம் திகதி நடைபெறவிருந்த யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்லைக் கண்காணிப்பதற்காக தெற்கில் இருந்து தருவிக்கப்பட்டிருந்த விசேட காவல் துறையினர் யாழ்.பொது நூலகத்துக்குப் பின்னால் இருந்த துரையப்பா விளையாட்டரங்கிலும் அதன் முன்னால் இருந்த யாழ். மத்திய கல்லூரியிலும் தங்கவைக்கப்பட்டிருந்தனர். யாழ். பொது நூலகத்தையும் துரையப்பா விளையாட்டரங்கையும் அடுத்ததாக வடக்கிற்கான உதவிப் பொலிஸ்மா அதிபர் பணிமனையும் நகரின் மத்திய பொலிஸ் நிலையமும் அமைந்திருந்தன. நகரிலோ உத்தியோகப்பற்றற்ற ஊரடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலை.

இருந்த போதிலும் பொது மக்கள் வரிப்பணத்தில் ஊதியம் பெறும் காவல்துறையினரால் திராவிட சிற்பவியல் பாங்கில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததும் தென்னாசியாவிலேயே மிகப் பெரியதும் ஆயிரத்துக்கும் அதிகமான புத்தகங்களையும் தேடற்கரிய கையெழுத்துப் பிரதிகளை உடையதுமான யாழ்ப்பாணப் பொது நூல் நிலையம்

## காடையர் குழு வெறியாட்டம்



மனுக்குலத்துக்கே விரோதமான ஒரு குற்றச் செயலாகவும் பண்பாட்டுப் படுகொலையாகவும் தீயிட்டுப் பொசுக்கப்பட்டது.

இத்தகைய ஓர் பண்பாட்டுப் படுகொலை இத் தீவின் வரலாற்றில் இது முதல் நிகழ்வும் அல்ல! இறுதி நிகழ்வும் அல்ல!! கோட்டை இராசதானியின் சேனாதிபதி சப்புமல் குமாரயா யாழ்ப்பாணம் இராசதானி மீது படையெடுத்து வந்தபோது நல்லூர் நாயன்மார்க் கட்டில் இருந்த யாழ்ப்பாண இராசதானியின் தேசிய சரஸ்வதி நூலகம் அது உள்ளடக்கியிருந்த அரும் பெரும் சித்த வைத்திய நூல்களுடன் தீயினால் முற்றாகப் பொசுக்கப்பட்டது. யாழ்ப்பாண இராசதானியின் வேந்தர்கள் சிறந்த சித்த வைத்திய நிபுணர்களாக விளங்கியதுடன், தாமே பல மருத்துவ நூல்களை எழுதியிருந்ததும் தெரிந்ததே! 'சரஸ்வதி' நூலகம் அவற்றையும் உள்ளடக்கியிருந்தது.

அது வரலாற்றில் முற்பட்ட நிகழ்வாக இருந்தால், யாழ். பொது நூலகம் அழிக்கப்பட்டதன் பின் காஸா நகரில் சுவிடிஸ் மக்களால் அன்பளிப்பாகத் தரப்பட்டிருந்த குளோப்' நூலகமும் அவ்வாறே அழிக்கப்பட்டிருந்தது. மேலும், பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி நூலகம் 1984 ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் முதல் நாளில் அதன் நூற்று ஐம்பது வருடகால புத்தகச் சேர்வுகளுடன் பாதுகாப்புப் படையினரால் தீயினால் அழிக்கப்பட்டது. சென்னை இந்து' பத்திரிகையின் சிறப்பு நிருபர் ஜி. பார்த்தசாரதி தமது யாழ்ப்பாணச் சுற்றுப் பயணத்தின் பின் இதனை அதன் செப்டெம்பர் 28 ஆம் திகதிய இதழில் அம்பலப்படுத்தியிருந்தார்.

யாழ்ப்பாணப் பொது நூல் நிலையம் தீயில் பொசுங்குவதை யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி மேல் மாடியில் இருந்து காண நேர்ந்த யாழ்ப்பாணத்தின் நடமாடும் நூலகமாகப் போற்றப்பட்டு வந்தவரான பன்மொழிப் புலவர் வண. பிதா தாவீது அடிகள் பேரதிர்ச்சி யடைந்தவராக மூர்ச்சித்து மரணமானார். இந்த ஜுன் முதல் நாள் அடிகளாரின் இருபத்தேழாவது நினைவு தினமாகும்.

யாழ். அரசாங்க அதிபராக அப்போது பதவியில் இருந்த யோகேந்திரா துரைச்சாமி தமது உத்தியோகபூர்வ வதிவிடத்தில் வாழாது யாழ். மாணிக்கூட்டுக் கோபுரத்தை அடுத்துள்ள தமது தந்தையின் மகேந்திரா' இல்லத்திலேயே வசித்து வந்தார். யாழ். பொது நூலகம் எரிந்து கொண்டிருப்பதை யாழ். மாநகர ஆணையாளருக்கு தொலைபேசி மூலம் தெரிவித்திருந்தவர் யாழ். அரசாங்க முகவரே.

தகவல் தெரிந்ததும் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்த காவல்துறையினரின் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு சட்டத்தையும் பொருட்படுத்தாது மாநகர ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் மாநகரசபை ஊழியர் சிலரையும் உதவிக்கு உடன் அழைத்துக் கொண்டு ஸ்தலத்துக்கு விரைந்தவர் அங்கு நகர மண்டபம், சுப்பிரமணிய பூங்கா, நூலகம் மற்றும் திறந்த வெளியரங்கு காவலர்களின் ஒத்துழைப்புடன் தீயை அணைப்பதற்குப் பெரிதும் முயன்றார். ஆயினும் காவல் துறையினரோ அதனை அனுமதியாது அவர்களை அங்கிருந்து விரட்டிவிட்டனர். ஆகவே, வேறுவழியின்றி மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் காரைநகர் கடற்படையினருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு உதவி கோரியிருந்தார். கடற்படையினர் உதவிக்கு விரைந்து வந்திருந்தபோதும் அதற்குள் நூலகம் பெரிதளவு முழுமையாகவே அழிந்துவிட்டது.

ஊர் வாயை உலை மூடியால் மூடும் ஓர் எத்தனம் போன்றே யாழ்ப்பாணத்தில் தாம் நிகழ்ந்தவிருந்த பண்பாட்டுப் படுகொலை குறித்த தகவல் செய்தி ஊடகங்களுக்கு எட்டாதிருக்கச் செய்யும் முற்காப்பு நடவடிக்கையாகவே 'ஈழநாடு' பணிமனை முன்கூட்டியே தீக்கிரையாக்கப்பட்டிருந்தது.

ஆகவே, யாழ்.பொதுநூலகம் அழிக்கப்பட்டிருந்த காட்சியை நேரில் சென்று கண்டிருந்தோர் புறநீங்கலாக யாழ்.குடாநாட்டினுள் வசித்தவர்களுக்குத் தானும் அச்சம்பவம் செய்தியாக அறிவிக் கப்பட்டிருக்கவில்லை. தலைநகர் கொழும்பில் இருந்து வெளியிடப்பட்ட ஊடகங்களுக்கோ அச்சம்பவம் வெறும் தகவலாகத்தானும் எட்டியிருக்கவில்லை. எனவே, தலைநகர் கொழும்பில் வெளி யிடப்பட்ட பத்திரிகைகளோ இலத்திரனியல் ஊடகங்களோ யாழ். பொதுநூலகத்துக்குச் சம்பவித்திருந்த பேரழிவு குறித்து ஒரு வார்த்தைதானும் பிரஸ்தாபியாதிருந்தமை புரிந்து கொள்ளக்கூடியதே. *

## வவுனியா தாலிக்குளத்தில் இளைஞர் குழு தாக்குதல்!

### 3 பெண்கள் உட்பட 7 பேர் காயம்

வவுனியா, ஜூன் 01

வவுனியா, தாலிக்குளம் பகுதியில் வீடுபுகுந்து இளைஞர் குழு கூரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்தியதில் 3 பெண்கள் உட்பட 7 பேர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதனால் அப்பகுதியில் பதற்ற நிலையும் ஏற்பட்டது.

கடந்த புதன்கிழமை வவுனியா, தாலிக்குளம் பகுதியில் திருமண வைபவம் ஒன்று இடம்பெற்றது. அதன் பின் நடந்த விருந்துபசார நிகழ்வின்போது இரு பகுதியினருக்கு இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து முரண்பட்டுக் கொண்ட ஒரு பகுதி இளைஞர் குழு நேற்று முன் தினம் மாலை தம்முடன் முரண்பட்ட மற்றைய குழுவினரின் வீட்டில் புகுந்து வாள், கத்தி, பொல்லு, போத்தல் போன்ற கூரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனால் இரு பகுதியிருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தில் 3 பெண்கள் உட்பட 7 பேர் காயமடைந்த நிலையில் இரவு வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ - 100)

## 77 பாகிஸ்தான், ஆப்கன் அகதிகள் இரவோடு இரவாக வவுனியாவுக்கு!

### அரசியல்வாதிகள், மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும்

*வவுனியா, ஜூன் 01*

***பா**கிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளைச் சேர்ந்த அகதிகளில் ஒரு தொகுதியினர், நேற்றுமுன்தினம் இரவு வவுனியா நோக்கி நகர்த்தப்பட்டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.*



நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்திலிருந்து அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் ஏற்பாட்டில் அழைத்து வரப்படும் இந்த அகதிகளில் சுமார் 77 பேர் இரண்டாம் கட்டமாக வவுனியா நோக்கி வந்துள்ளனர்.

அரசியல்வாதிகள் மற்றும் பொது மக்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் வவுனியா நோக்கி நகர்த்தப்படும் இரண்டாம் கட்ட அகதிகள் இரவு 11 மணியளவில் வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தை வந்தடைந்தனர்.

கடந்த 22ஆம் திகதி 35 அகதிகள் பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமுக்கு நீர்கொழும்பில் இருந்து நகர்த்தப்பட்ட நிலையிலேயே இரண்டாம் கட்டமாக சுமார் 77 பேர் இப்போது வந்துள்ளனர். (ஐ)

## பாசையூர் வெளிச்ச வீடு அபிவிருத்தி; விசேட குழு நேரில் சென்று ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 01

பாசையூர் கடற்கரைப் பகுதியில் அபிவிருத்தி செய்யப்படவிருக்கின்ற வெளிச்ச வீட்டை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த அந்தத் திட்டம் தொடர்பில் ஆய்வு செய்யும் விசேட குழு ஒன்று நேரில் சென்று பார்வையிட்டது.

இந்தக் குழுவினருடன் யாழ். மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட், யாழ். பிரதேச செயலாளர் சா.சுதர்சன், யாழ் மாநகர ஆணையாளர், யாழ் மாநகர பொறியியலாளர்கள், அரச அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

வெளிச்சவீட்டை அபிவிருத்தி செய்து தருமாறு நீண்டகாலமாக கடற்றொழிலாளர்களும், அப்பகுதிப் பொதுமக்களும் கோரிக்கை விடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த விஜயத்தின் போது வெளிச்ச வீட்டின் தற்போதைய நிலை, அபிவிருத்தி நடவடிக்கையின்போது மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.



### தாக்குதல் தடுக்கப்படாமை தொடர்பான விசாரணை

## முழு நீதியரசர் ஆயம் கோருகிறது சட்ட மா அதிபர் திணைக்களம்!

கொழும்பு, ஜூன் 01

ஏப்ரல் 21 ஆம் திகதி நடந்த தாக்குதல் குறித்து அறிந்து நடவடிக்கை எடுக்காதமை தொடர்பில் பொலிஸ்மா அதிபர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரிக்க 5 பேர் கொண்ட முழு நீதியரசர் ஆயத்தை (பென்ச்) நியமிக்க சட்ட மா அதிபர் திணைக்களம் நேற்று உயர்நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தாக்குதல் குறித்து அறிந்து நடவடிக்கை எடுக்காதமை தொடர்பில் பொலிஸ் மா அதிபர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட ஐந்து மனுக்கள் மீதான விசாரணை நேற்று நடைபெற்றபோது, சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திருமதி பர்சானா ஜெமீல் (ஜனாதிபதி சட்டத்தரணி) இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

நீதியரசர்கள் சிசிர டி ஆப்ரூ, முருது பெர்னாண்டோ, அமரசேகர ஆகியோர் முன்னிலையில் இந்த மனுக்கள் ஆராயப்பட்டன.

வழக்கு ஜூன் 6 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

## நொச்சியாகம விபத்தில் படுகாயமுற்ற மற்றொரு வவுனியா இளைஞன் சாவு!

வவுனியா, ஜூன் 01

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வாகனத்தில் சென்று திரும்பியபோது நொச்சியாகம பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த மற்றுமொரு வவுனியா இளைஞன் நேற்று அதிகாலை அனுராதபுரம் வைத்தியசாலையில் மரணமானார்.

விமான நிலையத்துக்குச் சென்று மீண்டும் வவுனியா நோக்கி வந்த ஹயஸ் வான் நொச்சியாகம பாலத்தில் மோதி விபத்துக்குள்ளானது. இதன் காரணமாக வாகனத்தில் பயணித்த வவுனியா தவசிக்குளத்தைச் சேர்ந்த விஜயகுமார் தனுசன் (வயது - 23) என்ற இளைஞன் உயிரிழந்தார். வாகனத்தில் பயணித்த மேலும் நால்வர் காயமடைந்த நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இவர்களில் படுகாயமடைந்திருந்த வவுனியாவைச் சேர்ந்த ஆசிரியரான பெரியசாமி முகுந்தன் (வயது - 32) சிகிச்சை பயனின்றி மரணமடைந்துள்ளார். (ஐ-100)

## ஐ.நா. பிரதிநிதிகள் நேற்று வடக்கு ஆளுநருடன் பேச்சு



யாழ்ப்பாணம், ஜூன் 01

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் தெற்காசியப் பிராந்திய பணிப்பாளர் ஜீன் கோச் மற்றும் இலங்கைக்கான பணிப்பாளர் திம் சுதொன் ஆகியோர் வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்றுக் காலை வடக்கு ஆளுநர் செயலகத்தில் சந்தித்தனர்.

இதன்போது வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் விரிவாகப் பேசப்பட்டது. (ஐ)

## பலத்த இராணுவப் பாதுகாப்புடன் வவுனியாவில் நோன்புப் பெருநாள்








வவுனியா, ஜூன் 01

பலத்த இராணுவப் பாதுகாப்புக்கு மத்தியில் வன்னி பிராந்திய இராணுவத்தினரின் ஒழுங்கமைப்பில் வவுனியா பெரிய பள்ளிவாசலில் நோன்பு பெருநாள் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

சர்வமதத்தலைவர்களின் ஆசியுடன் வவுனியா பெரிய பள்ளிவாசலில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை ஆரம்பமான நோன்புப் பெருநாளில் நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கலந்து கொண்டனர்.

இதன்போது சர்வமதத் தலைவர்களின் ஆசியுரை மற்றும் நினைவுப்பரிசில் வழங்கல் என்பன இடம்பெற்றிருந்தன.

இந்த நிகழ்வில் வன்னிப் பிராந்திய இராணுவத்தினர், கடற்படையினர், பொலிஸார், தமிழ் சிங்கள முஸ்லிம் பொதுமக்கள், வர்த்தக நலன்புரிச் சங்கத்தினர், வர்த்தகர் சங்கத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

## பயங்கரவாதத் தாக்குதல் குறித்து ஆராயும் தெரிவுக்குழுவின் அடுத்த அமர்வு ஜூன் 4

கொழும்பு, ஜூன் 01

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாதக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழு தனது அமர்வை மீண்டும் எதிர்வரும் 04 ஆம் திகதி நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அன்றைய தினம் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோர் சாட்சியமளிப்பதற்கு அழைக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது. (ஐ)

# முதல் போட்டியிலே மிரட்டிய ஸ்டோக்ஸ்



உலகக்கோப்பை போட்டியில் தென்னாபிரிக்கா அணிக்கெதிரான ஆட்டத்தில் இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் பென் ஸ்டோக்ஸ் பறந்து ஒற்றைகையில் எடுத்த பிடிதற்போது சமூகவலைத் தளங்களில் வைரலாகி வருகிறது.

இங்கிலாந்து நடைபெற்று வரும் உலகக்கிண்ணத் தொடரின் நேற்றுமுன்தினம் முதல் போட்டியில் இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா அணிகள் மோதின.

சொந்த மண்ணில் விளையாடிய இங்கிலாந்து அணி, தென்னாபிரிக்காவை 104 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில் இப்போட்டியின் 35ஆவது ஓவரை இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரஷீத் வீசினார். அப்போது அதை எதிர்கொண்ட தென்னாபிரிக்கா வீரர் அண்டில் பாம்பிலிலெக் திசையில் அடித்து ஆடினார்.

பந்தானது சிக்ஸரை நோக்கிச் சென்று கொண்டிருந்த நிலையில், அங்கிருந்த பீல்டர் பென் ஸ்டோக்ஸ் அபாரமாக ஒற்றை கையில் தாவி பிடித்தார்.

இந்த கேட்சை பார்த்தபோது, நடந்து முடிந்த ஐ.பி.எல் தொடரில் சென்னை அணிக்கெதிரான போட்டியின்போது, ரெய்னாவின் பிடியை பொல்லார்ட் எப்படி பிடித்தாரோ அதே போன்று இருந்தது என்று கூறி, சமூகவலைத்தளங்களில் இரண்டு வீடியோக்களும் வைரலாகி வருகின்றன.

# உலகக் கிண்ணத்தை ஆஸி. அணி வெல்லும்

உலகக்கிண்ணத்தை ஆஸ்திரேலிய அணி வெல்லும் என்று அந்த அணியின், முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் அளித்த செவ்வியில்–

கடந்த 12 மாதங்களில் ஆஸ்திரேலிய அணி சிறப்பாகச் செயல்படாததால் உலகக் கிண்ணப் போட்டியிலும் அது சிறப்பாக செயல்படாது என்று பலரும் எழுதுகிறார்கள். ஆனால் கடந்த சில மாதங்களாக ஆஸ்திரேலிய அணி நம்பிக்கை அளிக்கும் வகையில் விளையாடி வருகிறது. இந்த உலகக் கிண்ணப் போட்டியை இந்தியா, இங்கிலாந்து அணிகள் வெல்ல வாய்ப்பு இருக்கிறது. ஏனெனில் ஒரு நாள் போட்டியில் அவர்கள் சமீபகாலங்களில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி உள்ளனர்.

கடந்த கால வரலாறுகளை புரட்டி பார்த்தால் உலகக் கிண்ணப் போட்டியில் ஆஸ்திரேலிய அணி எவ்வளவு சிறப்பாக விளையாடி இருக்கிறது என்பது தெரியும். கடைசி 6 உலகக் கிண்ணப் போட்டிகள் 4 இல் ஆஸ்திரேலியா சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. எனவே இந்த போட்டியிலும் அந்த அணி நிச்சயம் வெல்லும் என்று தெரிவித்துள்ளார்.



# ஐரோப்பிய லீக் கிண்ணத்தை மீண்டும் ஏந்தியது செல்சியா!

யு.இ.எவ்.ஏ ஐரோப்பிய லீக் கிண்ண தொடரில் செல்சியா அணி, 4 – 1 என்ற கோல்கள் கணக்கில் ஆர்சனல் அணியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம், செல்சியா அணி 2013ஆம் ஆண்டு ஐரோப்பிய லீக்கை வென்ற பின் ஐரோப்பிய பட்டம் ஒன்றை வெல்வது இது முதல் முறையாகும். செல்சியா அணியின் ஐந்தாவது ஐரோப்பிய கிண்ணம் இதுவாகும்.

செல்சியா அணியை விடவும் இங்கிலாந்து கழகங்களில் லிவர்பூல் அணி அதிகமாக 8 முறை ஐரோப்பிய கிண்ணங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அசர்பைஜான் தலைநகர் பகுவில் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில், இரண்டு அணிகளும் ஆரம்பம் முதல் சிறப்பாக விளையாடின.

எனினும் இரு அணிகளால் முயற்சித்தும் கோல் அடிக்க முடியவில்லை. இதனால் முற்பாதி கோல் எதுவுமின்றி சமநிலைக்கு வந்தது.

இதனை தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது பாதியில், செல்சியா அணி ஆக்ரோஷமாக விளையாடியது. இதன்பலனாக போட்டியின் 49ஆவது நிமிடத்தில், ஒலிவியர் கிரவுட் தலையால் ஹெடர் செய்து கோலொன்றை புகுத்தி இரசிகர்களை கொண்டாட வைத்தார்.

இதைத் தொடர்ந்து 59ஆவது நிமிடத்தில் ஈடன் ஹசார்ட் பரிமாறிய பந்தைப் பெற்ற பெட்ரோ கோல் கம்பத்தின் மத்தியில் இருந்து தனது இடது காலால் உதைத்து செல்சிக்கு இரண்டாவது கோலை பெற்றுக் கொடுத்தார்.

நான்கு நிமிடங்கள் கழித்து கிரவுட் எதிரணி பெனால்டி பெட்டிக்குள் வீழ்த்தப்பட்டதால் வழங்கப்பட்ட ஸ்பொட் கிக் மூலம் ஹசார்ட் கோல் புகுத்தி செல்சியா அணியை 3 – 0 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலை பெறச் செய்தார்.

இந்நிலையில் பெனால்டி பெட்டிக்கு வெளியில் இருந்து அலெக்ஸ் இவோபி ஆர்சனல் அணிக்காக முதல் கோலை பெற்றுக்கொடுத்தார்.

இதனையடுத்து, மூன்று நிமிடங்களுக்கு பிறகு 72ஆவது நிமிடத்தில் கிரவுட் தந்திரமாக பரிமாற்றி பந்தைக் கொண்டு ஈடன் ஹசார்ட் கோல் புகுத்தினார். இதன் மூலம் 4 – 1 என்ற கோல்கள் கணக்கில் செல்சியா அணி முன்னிலைப் பெற்றது.

இதன்பிறகு ஆர்சனல் அணியால் பதில் கோலை புகுத்த முடியவில்லை. இதனால் போட்டியின் இறுதியில் 4 – 1 என்ற கோல்கள் கணக்கில் செல்சியா அணி வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது. இந்த வெற்றியை தற்போது செல்சியா அணி இரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.

இவ்வெற்றியின் நாயகனாக கருதப்படும், பெல்ஜியத்தின் நட்சத்திர வீரரான ஈடன் ஹசார்ட் செல்சி அணியுடனான ஏழு ஆண்டு உறவை முடித்துக் கொண்டு ரியல் மெட்ரிட் கழகத்திற்கு செல்ல எதிர்பார்த்திருக்கும் நிலையில் இது அவரது பிரியாவிடை வெற்றியாகவும் அமைய வாய்ப்பு உள்ளது.

இதுகுறித்து அவர் கூறுகையில்–

நான் முடிவை ஏற்கனவே எடுத்து விட்டேன். இரு கழகங்களுக்காகவும் எதிர்பார்த்திருக்கிறேன். இது பிரியாவிடையாக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். ஆனால் கால்பந்தில் எதுவும் நடக்கலாம்' என கூறினார். 28 வயதான ஈடன் ஹசார்ட், 2018ஆம் ஆண்டிலிருந்து பெல்ஜியம் அணிக்காக 100 போட்டிகளில் விளையாடி 30 கோல்களை அடித்துள்ளார்.

அதேபோல, 2012ஆம் ஆண்டிலிருந்து செல்சியா அணிக்காக விளையாடி வரும் அவர் 245 போட்டிகளில் விளையாடி 85 கோல்களை அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தலையை தாக்கிய பந்தால் நிலைகுலைந்தார் அம்லா

இங்கிலாந்துக்கு எதிராக நேற்று முன்தினம் நடந்த உலகக்கிண்ண லீக் போட்டியில், தென்னாபிரிக்க அணியின் தொடக்க வீரர் ஹசிம் அம்லா காயமடைந்து வெளியேறினார்.

உலகக்கிண்ணத்தின் முதல் லீக் போட்டி, லண்டனில் உள்ள கென்னிங்ஸ்டன் ஓவல் மைதானத்தில் இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையே நடைபெற்றது.

நாணயச் சுழற்சி வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா பந்துவீச்சை தெரிவு செய்தது. அதன்படி களமிறங்கிய இங்கிலாந்து அணி ஸ்டோக்ஸ்(89), மோர்கன்(57), ஜேசன் ரோய்(54) மற்றும் ஜோ ரூட் (51) ஆகியோரின் அதிரடியால் 311 ஓட்டங்கள் குவித்தது.

அதனைத் தொடர்ந்து களமிறங்கிய தென்னாபிரிக்க அணியில், தொடக்க வீரர் ஹசிம் அம்லா இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜொஃப்ரி



ஆர்ச்சர் வீசிய பந்தில் காயமடைந்தார். இன்னிங்சின் 4ஆவது ஓவரில், 144.8 கிலோ மீற்றர் வேகத்தில் ஆர்ச்சர் பந்து வீசியதால், அது அம்லாவின் தலையில் கடுமையாக தாக்கியது.

இதனால் நிலைகுலைந்துபோன அம்லா துடுப்பாட்டம் செய்ய முடியாமல் மைதானத்தை விட்டு வெளியேறினார். அதன் பின்னர் தென்னாபிரிக்க அணியின் விக்கெட்டுகள் சீட்டுக்கட்டு போல் விழுந்தன.

பின்னர் மீண்டும் களமிறங்கிய அம்லா 13 ஓட்டங்களில் அவுட் ஆனார். முடிவில் தென்னாபிரிக்க அணி 39.5 ஓவரில் 207 ஓட்டங்களுக்கு சுருண்டது. டி கொக் அதிகபட்சமாக 68 ஓட்டங்கள் எடுத்தார். (ஐ)



# பொல்லார்ட்டுக்கு ஆண் குழந்தை

மேற்கிந்திய தீவு அணியின் அதிரடி ஆட்டக்காரரான பொல்லார்ட்டுக்கு அழகான ஆண் குழந்தை பிறந்துள்ளது.

இந்தியாவில் நடைபெற்று முடிந்த ஐபிஎல் தொடரில் சிறப்பான ஆட்டத்தைக் கொடுத்து மும்பை அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தவர் தான் அதிரடி மன்னன் கிரன் பொல்லார்ட்.

தற்போது மேற்கிந்திய தீவு அணிக்கான உலகக்கோப்பை தொடரில் மாற்று வீரருக்கான பட்டியலில் பொல்லார்ட் இடம் பெற்றுள்ளார்.

இந்நிலையில் அவர் நேற்று முன்தினம் தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில், தனக்கு அழகான ஆண் குழந்தை பிறந்திருப்பதாகவும், குழந்தை நல முடன் இருப்பதாகவும் கூறிப் புகைப்படத்தை வெளியிட்டுள்ளார்.

இந்த புகைப்படத்தைக் கண்ட கிரிக்கெட் வீரர்கள் பலரும் அவருக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து வருகின்றனர்.



# கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் சம்பியன்

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் தொடரொன்றில் கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் சம்பியனானது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற குறித்த தொடரின் இறுதிப் போட்டியில், திருநெல்வேலி கிரிக்கெட் கழகத்தை வென்றே கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் சம்பியனாகியிருந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய திருநெல்வேலி கிரிக்கெட் கழகத்துக்கு, இரண்டாவது ஓவரில் இருந்து கண்டம் ஆரம்பமாகியது. நிருசிகன் வீசிய அந்த ஓவரில் திருநெல்வேலி கிரிக்கெட் கழகத்தின் மூன்று விக்கெட்டுகள் வீழ்த்தப்பட, இரண்டு ஓவர்களில் ஒன்பது ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுகளை இழந்து அவ்வணி தடுமாறியது. இந்த இழப்பு நிருசிகனின் அடுத்த ஓவரிலும் தொடர்ந்தது. அந்த ஓவரில் மேலும் இரண்டு விக்கெட்டுகளை நிருசிகன் வீழ்த்த, 3.4 ஓவர்களில் 11 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுகளை இழந்து திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் தடுமாறியது.

ஆறாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த றொகான், அணித் தலைவர் பிரபவன் அணியைத் தூக்கி நிறுத்த அரும்பாடுபட்டனர். எனினும் பிரபவன் 15 ஓட்டங்களுடன் வெளியேறினார். றொகானும் ஆட்டமிழக்க 15.3 ஓவர்களில் 61 ஓட்டங்களுக்கு ஏழு விக்கெட்டுகளை திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் இழந்திருந்தது. எனினும், ஒன்பதாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த சுரேஸன், றஜிந்தன் அணி 100 ஓட்டங்களைக் கடக்க உதவினர். சுரேஸன் 30, றஜிந்தன் 36 ஓட்டங்களுடனும் வெளியேற திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் 32.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், நிருசிகன் 7, கஜானன் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு, 135 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலையம், முதலாவது விக்கெட்டை விரைவாக இழந்தது. அதன்பின்னர் வந்த துடுப்பாட்ட வீரர்கள், அடித்தாடி விரைவாக வெற்றியைப் பெற எத்தனித்தனர். இதனால், தேவையற்ற விக்கெட் இழப்பை கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் சந்தித்து, 22.3 ஓவர்களில் ஏழு விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றிலக்கையடைந்தது. துடுப்பாட்டத்தில் ரி. பானுஜன் 39, கே. ஜனுதாஸ் 32, சத்தியன் 19, றொசான் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், சிவராஜ் 3, றொகான் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அமைச்சர்ரிஷாத்பதியுதீன், கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா, மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி ஆகியோரை பதவி விலக்குமாறு வலியுறுத்தி அத்துரலிய ரத்ன தேரர் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் தற்போது கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவினால் பயன்படுத்தப்படுகின்றன. அவர் அங்கு கடுமையான இனவாதத்துடன் செயற்படுகிறார் என்று தமிழ் – சிங்கள மக்களிடையேகுற்றச்சாட்டொன்று முன்வைக்கப்படுகிறது.

இலங்கையில், ஏப்ரல் 21ஆம் திகதி பயங்கரவாதத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோது கிழக்கின் ஆளுநராக ஹிஸ்புல்லாவே இருந்தார்.

இதற்குப் பின்னரும், அவர் இனவாதமாகச் செயற்பட்டுள்ளார். தமது சமூகத்தினருக்காக மட்டும்தான் அவர் செயற்பட்டுள்ளார். இது ஆளுநர் ஒருவருக்கான தகுதியல்ல. அவர் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவில் விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேபோல், மேல்மாகாணத்தின் ஆளுநர் அஸாத் சாலியும் கடுமையான போக்குடன் நடந்து கொள்கிறார். அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, பல்வேறு குற்றங்களில் நாட்டில் ஈடுபட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இவை பாரதூரமான விடயங்களாகும். இதனால், இவர்கள் மூவரையும் உடனடியாகப் பதவி நீக்கம் செய்யவேண்டும் என்று நாம் வலியுறுத்துகிறோம். இந்த நடவடிக்கையை ஜனாதிபதி உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.

அத்தோடு, குருணாகல்– தம்புள்ளை வைத்தியசாலைகளில் சிங்களப் பெண்களுக்கு முஸ்லிம் அடிப்படைவாத வைத்தியர்களால் கருத்தடை செய்யப்பட்ட விவகாரம் குறித்து, தற்போது 300 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதுதொடர்பிலும், உடனடியாக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்கிறோம்.

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அரசு நஷ்ட ஈட்டையும் வழங்க வேண்டும். இந்த நான்கு கோரிக்கைளையும் அரசு மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியே எமது போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

எனது உயிர் போனாலும், இந்த விடயங்களில் இருந்து நான் என்றும் பின்வாங்கப்போவதில்லை என்பதையும் கூறிக் கொள்கிறேன் – என்றார். (ஐ)

## நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புல்லா ஆகியோரைப் பதவிகளில் இருந்து உடன் நீக்கவேண்டும் என வலியுறுத்தியே அவர் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றார்.

உயிர்த்தஞாயிறுதற்கொலைக் குண்டுத்தாக்குதல்களுடன் இந்த மூவருக்கும் தொடர்பு இருக்கின்றது எனவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன், ஆளுநர்களான அஸாத் ஸாலி, எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா ஆகியோரைப் பதவிகளில் இருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு 24 மணி நேரக் காலக்கெடுவைக் கடந்த 28ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் வழங்கியிருந்தார். இந்த நிலையிலேயே, அவர் நேற்று முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளார். (ஐ)

## அதிரடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்றுக்காலை புதுடில்லியில் தன்னுடன்தங்கியுள்ள இலங்கை அமைச்சர்களுடன் தனிப்பட்ட ரீதியில் பேச்சு நடத்திய ஜனாதிபதி மைத்திரிபால, ரத்னதேரரின் கோரிக்கையைக் கவனிக்கவேண்டிய அவசியம் எழுந்துள்ளதைக் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறாரென அறியமுடிந்தது.

பின்னர் அவர் அங்கிருந்து ரணிலுடன் தொலைபேசியில் பேச்சு நடத்தி இந்தச் சர்ச்சைகளுக்கு ஒரு முடிவை எடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

இதன்படி நேற்று இரவு நாடு திரும்பிய கையோடு அவர் முக்கிய பல தீர்மானங்களை எடுப்பாரெனச் சொல்லப்பட்டது.

அதன்படி அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தற்காலிகமாகப் பதவி விலக ஜனாதிபதி கோரவுள்ளாரென அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னர் ஜனாதிபதியின் தொலைபேசி உரையாடலையடுத்து நேற்று முற்பகல் அமைச்சர் ரிஷாத்துடன் பிரதமர் ரணில் அலரி மாளிகையில் அவசரச் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.

அத்துரலிய ரத்ன தேரர் மேற்கொள்ளும் உண்ணாவிரதப் போராட்டம் மக்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தலாம் என்பதால் அதற்கு முன் முடிவுகளை எடுப்பதென்றே ஜனாதிபதி மைத்திரி நேற்று மாலை இறுதி முடிவுக்கு வந்துள்ளாரென அறியமுடிந்தது. (ஐ)

## ஐ.எஸ்.ஐ.எஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதியும் – நாவலர் வீதியும் இணையும் புதுப்பள்ளிச் சந்தியில் ஜும்மாத் தொழுகையின் பின்னர் யாழ். முஸ்லிம் சமூகத்தினர் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஏப்ரல் 21 தாக்குதலுக்குக் கண்டனம்வெளியிடப்பட்டதுடன் அந்த நடவடிக்கைகளில்ஈடுபட்ட அனைவருக்கும் சட்டத்தின் மூலம் தண்டனைவழங்கவேண்டும் என்றும் கோரப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், நாட்டில் தற்போது உருவாகியுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதம் முற்றாக அழிக்கப்படவேண்டும் என வலியுறுத்தினர். (ஐ-07)

## மோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திகதி கொழும்பு வருகிறார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதுடில்லியில் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

தீவிரவாதத்தை இல்லாமல் ஒழிக்க அனைத்து நாடுகளும் ஒன்றுபடவேண்டுமெனவும் அவர் இதன்போது கூறியுள்ளார். (ஐ)

## டிசெ. 7ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்படி நவம்பர் 15 அல்லது டிசம்பர் 07 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் கட்டாயம் நடத்தப்படும் என்ற உறுதிமொழியையும் அவர் வழங்கினார்.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய நேற்று மாலை தெரண தொலைக்காட்சிக்கு நேர்காணல் வழங்கினார்.

இதன்போது 21/4 தாக்குதலை காரணம்காட்டி ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க நடவடிக்கை எடுக்கப்படலாம் என்ற கருத்து நிலவுகின்றது. எனவே, இது தொடர்பில் உங்கள் கருத்து என்னவாக இருக்கின்றது." என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

1988 ஆம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றபோது நிலைமை படுமோசமாக இருந்தது. பலவழிகளிலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. நாடே பதற்றமடைந்திருந்தது. ஆனால், தேர்தல் ஒத்திவைக்கப்படவில்லை.

எனவே, குண்டு தாக்குதலை மையப்படுத்தி தேர்தலை ஒத்திவைக்க முயற்சிப்பார்களாயின், அது பயங்கரவாதத் தாக்குதலை விட படுமோசமான செயலாகமே அமையும்.

நவம்பர் 9 ஆம் திகதிக்கு பிறகு வரும் ஒரு தினத்தில் தேர்தல் நடத்தப்படவேண்டும். அது டிசம்பர் 9 ஆம் திகதியை தாண்டிதாக இருக்ககூடாது.

ஆகவே, உடன் நடத்துவதாக இருந்தால் நவம்பர் 15 ஆம் திகதியும், காலக்கெடுவரை காத்திருந்து நடத்துவதாக இருந்தால் டிசம்பர் 7 ஆம் திகதியும் தேர்தலை நடத்தக்கூடியதாக இருக்கும்.

ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் ஆகியோருக்கும் இது தொடர்பில் அறிவித்துள்ளோம்." என்றார் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர். (ஐ)

## புலனாய்வுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தங்காலையில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தகவலை வழங்கும் புலனாய்வு முகவர் அமைப்புக்களை ஒரே கட்டமைப்புக்குள் கொண்டு வர வேண்டும். இவற்றினையே அனைத்து நாடுகளும் மேற்கொள்கின்றன. தற்போதுள்ள அரசும் இவற்றைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.


பொதுமக்களின் தேசிய பாதுகாப்பைப் பற்றிய முக்கியமான தகவலை வெளிப்படுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதது. ஈஸ்டர் ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதலுக்கு முன்னரும் பின்னரும் இடம்பெற்ற நிலைமைகளினால் ஏமாற்றமடைந்துள்ளோம்.

மிலேனியம் சிற்றி தொடர்பான விடயங்கள் வெளியாகியமையினால் அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் புலிகளினால் கொல்லப்பட்டனர். இதில் ஒருவர் மாத்திரம் நாட்டை விட்டு வெளியேறியிருந்தமையினால் தப்பிவிட்டார்.

புலனாய்வார்கள் விடயம் தொடர்பாக நாம் கூடுதல் கவனமாக இருக்கவேண்டும்.

நாட்டில் தற்போது நிலைமை 99 சதவிகிதம் நன்றாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டாலும் ஒரு சதவீதம் விடுபட்டுள்ளது. அந்த ஒரு சதவீதத்தை பற்றியே தற்போது எமக்கு கவலைகள் உள்ளன – என்றார். (ஐ)

# மாநாயக்கர்களை நேற்று சந்தித்தார் பேராயர் மல்கம்



பேராயர் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகை நேற்று மாலை கண்டியில் அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீட மாநாயக்கர் களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நாட்டின்தற்போதையநிலைமை உட்பட பல விடயங்கள் இந்த சந்திப்பின்போது ஆராயப்பட்டுள்ளது.

இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்துவது தொடர்பில் இந்தச் சந்திப்பின் போது கவனத்தில் கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது. (ஐ)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புதிய அமைச்சரவை நேற்று முன்தினம் மாலை புதுடில்லியில் நடந்த நிகழ்வில் பதவியேற்றது.

இந்த நிகழ்வில், இந்திய வெளிவிவகாரச் சேவையின் முன்னாள் மூத்த அதிகாரியான சுப்ரமணியம் ஜெய்சங்கரும் இந்திய மத்திய அமைச்சராக பதவியேற்றார்.

அவர், இந்திய வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் வெளிவிவகாரச் செயலராக இருந்தபோது நரேந்திர மோடி அரசின், வெளிவிவகாரக் கொள்கைகளில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பவராக ஜெய்சங்கர் விளங்கினார்.

அதனால், 2018ஆம் ஆண்டு அவர் இந்திய வெளிவிவகாரச் சேவையில் இருந்து ஓய்வுபெற்ற பின்னரும் இந்தியப் பிரதமரின் வெளிநாட்டுப் பயணங்களில் இணைக்கப்பட்டு வந்தார்.

2015ஆம் ஆண்டு தொடக்கம், இந்திய வெளிவிவகாரச் செயலராக இருந்தபோது ஜெய்சங்கர் அமெரிக்கா, சீனா தொடர்பான இந்திய அரசின் கொள்கைகளை வடிவமைப்பதில் முக்கிய பங்காற்றியவர்.

இவர், கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் முதல் நிலைச்செயலராகவும், இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதிப் படையின் அரசியல் ஆலோசகராகவும் செயற்பட்டவர்.

64 வயதுடைய சுப்ரமணியம் ஜெய்சங்கர், இந்திய நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் உறுப்பினராக இருக்காத நிலையிலேயே இந்திய வெளிவிவகார அமைச்சராகப்பதவியேற்றுள்ளார்.

இவர், தமிழ்நாட்டின் திருச்சியைச் சேர்ந்தவரும் இந்தியாவின் மூத்த சிவில் சேவை அதிகாரியும், அனைத்துலக விவகாரங்களில் வல்லுனராக இருந்தவரும், ஊடகவியலாளருமான கே.சுப்ரமணியத்தின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிவிவகாரச் சேவையின் முன்னாள் அதிகாரியான, எஸ். ஜெய்சங்கர் இந்திய வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளமை இந்திய அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, இந்திய நிதி அமைச்சராக நிர்மலா சீதாராமன் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

## சஹ்ரான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தாரியும் தேசிய தௌஹீத் ஜமாத்தின் தலைவருமான சஹ்ரான் ஹாசிம் பாவித்த மடிக் கணினி ஒன்று பாலமுனை களப்பில் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று பாலமுனையில் நேற்று முன்னெடுக்கப்பட்ட தேடுதலின்போது, தேசிய தௌஹீத் ஜமாத்தின் அம்பாறை மாவட்டத் தலைவர் சியாம் என்பவருடைய வீட்டிலிருந்து 35 லட்சம் ரூபா பணம் மீட்கப்பட்டது.

அதனையடுத்து பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பாலமுனைக் களப்பில் முன்னெடுக்கப்பட்ட தேடுதலில் தேசிய தௌஹீத் ஜமாத்தின் தலைவருமான சஹ்ரான் ஹாசிம் பாவித்த மடிகணினி மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அழைப்பின்பேரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

அதனைத்தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்றுப் புதுடில்லியிலுள்ள ஹைதராபாத் இல்லத்தில் இடம்பெற்றது.

ஹைதராபாத் உத்தியோக பூர்வ இல்லத்துக்குச் சென்ற ஜனாதிபதி மைத்திரியை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மிகுந்த நட்புடன் வரவேற்றார்.

சுமூக கலந்துரையாடலை தொடர்ந்து அரச தலைவர்கள் இருவரும் இருதரப்பு கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், தனது அழைப்பையேற்று பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொண்டமை தொடர்பில் நரேந்திர மோடி தனது மகிழ்ச்சியை வெளியிட்டார்.

மேலும் அண்மையில் இலங்கைக்கு முகங்கொடுக்க நேர்ந்த துரதிஷ்டவசமான தாக்குதல் குறித்து இந்தியப் பிரதமர் வருத்தம் தெரிவித்தார். சமாதானம் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துதல் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடினர்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகவும் பிராந்தியத்தில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காகவும் ஒன்றிணைந்து செயற்பட அரச தலைவர்கள் இதன்போது உறுதி பூண்டனர்.

நட்புநாடுகள் என்றவகையில் நெருக்கமாக செயற்படும் அரச தலைவர்களாக இவ்விடயத்தில் அர்ப்பணிப்புடன் செயற்படவும் இருவரும் இணக்கம் தெரிவித்தனர். (ஐ)

# தாக்குதல்களை வைத்து அரசியல் செய்யக்கூடாது

## சுரேஷ் பிறேமச்சந்திரன் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூன் 01

இலங்கையில் நடைபெற்ற குண்டுத்தாக்குதல்கள் சம்பவம் ஏன் நடைபெற்றன என்பதை பற்றி ஆராயாது குறுகிய அரசியல் நோக்கத்துடன் அரசும், எதிர்க்கட்சியும் செயற்படுகின்றன .இது மிகவும் கேவலமான செயற்பாடு .இதனால் நாட்டில் தேசிய பாதுகாப்பு மேலும் கேள்விக்குறியாகும் என ஈ.பி.ஆர். எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கட்டப்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில்அண்மையில்குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றன. இதனால்பலஉயிர்கள் காவு கொள்ளப்பட்டன.இந்தச் சம்பவத்தை முழுமையாக ஆராயாது அரசும் எதிர்க்கட்சியில் உள்ள மஹிந்த தரப்பும் தங்களின் குறுகிய அரசியல் தேவைக்காகப் பயன்படுத்தி வருகின்றன. இந்தச் சம்பவத்துடன் பலர் தொடர்புபட்டிருக்கலாம் எனக் கூறப்பட்டு வரும் நிலையில்அண்மையநாள்களாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மீது பலர் குற்றம் சாட்டி வருகின்றனர். அவர் சிறுபான்மை இனத்தை சேர்ந்தவர் என்பதால் இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றதா? அல்லது உண்மையிலேயே அவருக்கும் இந்தச் சம்பவங்களுக்கும் தொடர்பு உள்ளதா? என விசாரிக்க வேண்டும் – என்றார். (ஐ)

# முழுத் தெற்காசியாவுக்குமே மோடி பாதுகாவலனாக இருக்கவேண்டும்!

## அவரிடமே நேரில் கூறினார் மனோ கணேசன்



*கொழும்பு, ஜூன் 01*

***இந்தியாவுக்கு மட்டுமல்லாது முழு தெற்காசியாவுக்குமே பாதுகாவலனாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி இருக்கவேண்டும் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.***

அத்தோடு இந்தச் செய்தியை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் தான் நேரடியாகத் தெரிவித்தார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் பிரமராக நரேந்திர மோடி இரண்டாவது தடவையாகவும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பதவியேற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் அமைச்சர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரான ஆறுமுகம் தொண்டமான் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வின்போதே, தான் இந்த விடயத்தை அவரிடம் கூறினார் என அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கு மட்டுமல்லாது, முழு தெற்காசியாவுக்குமே பாதுகாவலனாக இருக்கவேண்டும் என தான் இந்திய பிரதமரிடம் நேரடியாக கூறினார் எனவும், அந்த கருத்தை அவர் ஆமோதித்து ஏற்றுக்கொண்டார் என்றும் மனோ கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே சமூக வலைத்தலங்களில் தான் தெரிவித்திருந்த கருத்து தொடர்பாக பிரதமர் மோடி ஏற்கனவே அறிந்திருந்தார் என்றும், இந்நிலையில் நேற்று தன்னைச் சந்திந்த பிரதமர், அவராகவே இந்தக் கருத்து தொடர்பாக வினவினார் என்றும் அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# காரைதீவு பிரதேச மதுக்கடைகளை அகற்ற மாணவர்கள் கோரிக்கை!



மட்டக்களப்பு, ஜூன் 01

சர்வதேச புகைத்தல் போதைப்பொருள் ஒழிப்பு நாளான இன்று,காரைதீவு பிரதேச செயலாளரூடாக காரைதீவுப் பிரதேசத்தில் இருக்கும் மதுக்கடை அகற்றவேண்டும் என்றகோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்வைத்து மகஜர் கையளிக்கப்பட்டது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவபீட மாணவன் சி.திரிமாறன் ஏற்றபாட்டில் காரைதீவிலுள்ள பாடசாலை மாணவர்கள் கையொப்பமிட்டு இந்த மகஜரை அதிபர், ஆசிரியர்கள் மூலமாக பிரதேச செயலாளரிடம் கையளித்தனர்.

தந்தையின் மதுபாவனையால் மன அழுத்தத்துக்கு உட்பட்ட மாணவன் கடந்த வருடம் தமிழ்நாட்டில் தற்கொலை செய்துகொண்டார் .

தனது மரணத்தின் பின்னராவது தந்தை மதுபாவனையை நிறுத்தவேண்டும் என்றும், மத்திய மாநில அரசு மதுக்கடையை மூட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இல்லாவிட்டால் தான் ஆவியாக வந்து மதுபானக்கடையை மூடுவேன் என்றும் கடிதம் எழுதிவிட்டே அந்த மாணவன் தற்கொலை செய்து கொண்டார்.

அந்த மாணவனின் நினைவு சுமந்து அவனின் புகைப்படம் தாங்கிய பதாகையுடன் புகைத்தல் மது போதை ஒழிப்புநாளன நேற்று,காரைதீவு பிரதேசத்தில் உள்ள மதுக்கடையால் தமது கல்வி பாதிக்கிறது என்றும் தாமும் தமது குடும்பமும் சமூக பொருளதார உளவியல் ரீதியாக பாதிக்கப்படுகின்றனர் எனவும் தமது எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி காரைதீவிலுள்ள மதுக்கடையை அகற்ற வேண்டுமெனவும் கோரி மாணவர்களால் கையொப்பமிடப்பட்ட மகஜர் பாடசாலை அதிபர், ஆசிரியர்களூடாகக் கையளிக்கப்பட்டது. (ஐ)

# பாதுகாப்பற்ற கிணற்றினுள் வீழ்ந்து உயிருக்குப் போராடிய யானை மீட்பு

வவுனியா, ஜூன் 01

வவுனியா வடக்கு, கனகராயன்குளம், பெரிய குளம் பகுதியிலுள்ள பாவனையற்ற கிணற்றில் நேற்று முன் தினம் இரவு தவறி வீழ்ந்து உயிருக்குப் போராடிய யானைக் குட்டி மீட்கப்பட்டது.

கனகராயன்குளம், பெரியகுளம் பகுதியில் ஆயுள்வேத வைத்திய சாலைக்கு அருகில் உள்ள பாவனையற்ற கிணற்றில் நேற்று முன் தினம் இரவு யானைக் குட்டி ஒன்று தவறி வீழ்ந்துள்ளது.

இதையடுத்து அருகிலிருந்தவர்களின் உதவியுடன் கிணற்றிலிருந்த தண்ணீர்வெளியேஇறைக்கப்பட்டு ஜே.சி.பி பாரம் தூக்கியின் உதவியுடன் யானைக்குட்டியைமீட்கும் நடவடிக்கை காலை முதல் கனகராயன்குளம் பொலிஸார், வவுனியா மற்றும் கிளிநொச்சி வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், கிராம மக்கள் ஆகியோரால் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து அந்த யானைக்குட்டி மீட்கப்பட்டு வனஜீவராசி அதிகாரிகளினால் பாதுகாப்பாக காட்டில் விடப்பட்டது.



# வவுனியா பொலிஸாரால் மரக்கடத்தல் முறியடிப்பு

வவுனியா, ஜூன் 01

வவுனியா மரக்காரம்பளையில் நேற்று அதிகாலை 1மணியளவில் மரக் கடத்தல் ஈடுபட்டவர்களைப் பொலிஸார் வழிமறித்து அந்த முயற்சியை முறியடித்துள்ளனர்.

வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா அபேயவிக்கிரம தலைமையின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது.

தாண்டிக்குளம் மரக்காரம்பளை வீதியில் ஓமந்தைப் பகுதியிலிருந்து சட்டவிரோதமான முறையில் பெறுமதிமிக்க 11 முதிரைக் குற்றிகள் பட்டா ரக வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. வாகனத்தை பொலிஸார் வழிமறித்தபோது அதனை நிறுத்தாது சாரதி வேகமாகச் செலுத்தியுள்ளார்.



வாகனத்தை துரத்திச் சென்று பொலிஸார் வழிமறித்தபோது அதனைக் கைவிட்டு சாரதி தப்பிச் சென்றுள்ளார். வாகனத்தின் உதவியாளர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் முதிரைக் குற்றிகளைக் கைப்பற்றிய பொலிஸார் வாகனத்தை விசாரணைகளுக்காக வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்துள்ளனர்.

தப்பிச் சென்ற வாகனச் சாரதியைக் கைது செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

(ஐ – 100)

# தமிழரசுவின் தேசிய மாநாடு இம்மாத இறுதியில் நடக்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 01

இலங்கை தமிழ் அரசு கட்சியின் தேசிய மாநாடு இந்த மாத இறுதி வாரத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கட்சியின் தேசிய மாநாட்டை கடந்த ஏப்ரல் மாத இறுதியில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் பயங்கரவாத தாக்குதல்களினால் மாநாடு பிற்போடப்பட்டிருந்தது. தற்போது மீண்டும் மாநாட்டை நடத்தும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் முன்னோடியாக வாலிபர் முன்னணியின் மத்திய செயற்குழு கூட்டம் இன்று இடபெறவுள்ளது. இன்று பிற்பகல் மாட்டின் வீதியில் உள்ள கட்சி அலுவலகத்தில் இந்தக் கூட்டம் இடம்பெறும்.

அத்தோடு இன்று காலை கட்சியின் யாழ் மாவட்டக் கூட்டம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம் பெறும். இதில் மாவட்ட குழு உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள்.

இரண்டு கூட்டங்களிலும் கட்சியின் தேசிய மாநாட்டு முன் ஏற்பாடுகள் குறித்து ஆராயப்படும். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 01.06.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.